லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-9 பிப்ரவரி-2019 மாதஇதழ் விலை ₹ 10




வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கயம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

## தலையங்கம்




# முன்னெச்சரிக்கை தேவை!

சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஏரிகள் வறண்டுகொண்டிருக்கின்றன. இந்த நான்கு ஏரிகளின் மொத்தக் கொள்ளளவு சுமார் 11,000 மில்லியன் கன அடி. கடந்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் இந்த நான்கு ஏரிகளிலும் ஏறக்குறைய 5,000 மில்லியன் கன அடி நீர் இருந்தது. இந்த ஆண்டில் தற்போதைய நிலவரப்படி சுமார் 1,000 மில்லியன் கன அடி நீரே உள்ளது. மொத்தக் கொள்ளளவில் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவான நீர் இருப்பே தற்போது உள்ளது. இது அடுத்த மாதத்துக்குள்ளேயே தீர்ந்துவிடும். அதற்கடுத்து வீராணம் ஏரியை நம்பித்தான் நாட்களை நகர்த்த வேண்டியிருக்கும். வீராணத்திலிருந்து கொண்டுவரப்படும் நீரின் அளவு நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் மட்டுமே. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திலிருந்து கிடைப்பதும் நாளொன்றுக்குச் சுமார் 170 மில்லியன் லிட்டர் மட்டுமே.

வட கிழக்குப் பருவமழை பொய்த்துப்போனதன் விளைவுகளைத் தமிழகம் அடுத்துவரும் மாதங்களில் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழகம் முழுவதுமே இதன் தாக்கம் இருக்கப்போகிறது என்றாலும் சென்னை மாநகரம் மிக மோசமான நிலையைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. 140 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை எதிர்கொள்ளப்போகும் மிகப்பெரிய குடிநீர்ப் பஞ்சமாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. ஆனால், அதற்கான முன்னேற்பாடுகளைத் தமிழக அரசும் சென்னை மாநகராட்சியும் தொடங்கிவிட்டதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

சென்னை எதிர்கொள்ளவிருக்கும் குடிநீர்ப் பஞ்சத்தை எப்படிச் சமாளிப்பது என்ற செயல்திட்டத்தைத் தமிழக அரசு உருவாக்கி, உடனே அதைச் செயல்படுத்தும் பணியில் இறங்க வேண்டும். ஆந்திரப் பிரதேசத்துடன் பேசி கிருஷ்ணா நதிநீரைப் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும். பணிகள் முடிவடையாத நிலையிலிருக்கும் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டும். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அனைத்துக்கும் மேலாக நீர்ப் பயன்பாடு, சிக்கனம் குறித்த விழிப்புணர்வையும் மக்களிடம் உருவாக்கியாக வேண்டும்.

சென்னையின் குடிநீர்த் தேவை நாளொன்றுக்கு 830 மில்லியன் லிட்டர். கடந்த டிசம்பர் மாதத்தில் குழாய்கள் மூலமாக நாளொன்றுக்கு 650 மில்லியன் லிட்டரை விநியோகித்து வந்த சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம், தற்போது சுமார் 100 மில்லியன் லிட்டரைக் குறைத்துக்கொண்டிருக்கின்றது. மாங்காடு அருகே கைவிடப்பட்ட கல்குவாரிகளிலிருந்து நீரெடுத்து, சுத்திகரிப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதனால், பிப்ரவரி மாதத்தின் மத்தியிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் கிடைக்கும். கடலூர் மாவட்டத்தின் கடிலம் நதிக்கரையில் உள்ள கிராமங்களின் தனியார் விவசாயக் கிணறுகளிலிருந்து நீரெடுக்கும் ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எது எப்படியிருந்தாலும், தற்போதைய நீராதாரங்களைக் கொண்டு மார்ச் மாதம் வரைக்கும்தான் சமாளிக்க முடியும்.

– ஆசிரியர்

ஒரு ஹோமியோபதி போலி சான்றிதழ் 1 லட்சரூபாய்க்கு விற்கப்படுவதாக தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவக்கவுன்சில் முன்னாள் பதிவாளர் ஞானசம்பந்தம் கொடுத்த புகாரில் பலரையும் அதிரடியாக கைது செய்தது சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸ். இதன், தொடர்ச்சியாக சிக்கப்போகிறவர் தமிழ்நாடு இந்திய மருத்துவக்கவுன்சிலின் 'நிழல்' பதிவாளர் ஜெயக்குமார்தான் என்கிறது காவல்துறை. எம்.பி.பி.எஸ். எனப்படும் அலோபதி மருத்துவர்கள் தமிழ்நாடு மருத்துவக்கவுன்சில் பதிசெய்யவேண்டும். பி.டி.எஸ். எனப்படும் பல்மருத்துவர்கள் பல் மருத்துவக்கவுன்சிலில் பதிவுசெய்யவேண்டும். அதேபோல், 'ஆயுஷ்' எனப்படும் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, நேச்சுரோபதி ஆகிய ஐந்துவிதமான இந்திய மருத்துவர்கள் பதிவுசெய்துகொள்ளும் இடம்தான் தமிழ்நாடு இந்திய மருத்துவக்கழகம். ஹோமியோபதிக்கும் அதே வளாகத்தில் தனி கவுன்சில் உள்ளது குறிப்பிடத்தக்கது. அவரவர்கள், என்னென்ன மருத்துவம் படித்தார்களோ அதற்கான கவுன்சிலில் பதிவுசெய்திருந்தால் மட்டுமே மருத்துவ சிகிச்சை அளிக்கமுடியும்.

# போலி சர்டிஃபிகேட், சிச

ஆக, சென்னை அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா மருத்துவமனை வளாகத்திலுள்ள தமிழ்நாடு இந்திய மருத்துவக்கழகத்தின் உண்மையான பதிவாளர் ராஜசேகராக இருந்தாலும் ஆல் இன் ஆல் பதிவாளரைப்போல் ஜெயக்குமார்தான் என்கிறார்கள். யார் இந்த ஜெயக்குமார்? "ஓலைச்சுவடி பிரிவில் பணியாற்றிய போஸ் என்பவரின் உறவினரான ஜெயக்குமார் அவரது சிபாரிசில் ஆஃபிஸ் அஸிஸ்டெண்டாக சேர்ந்து கடந்த பத்து வருடங்களுக்குமேலாக தமிழ்நாடு இந்திய மருத்துவக்கழகத்தின் உதவியாளராக இருக்கிறார். 2009-ல் திருக்குமார் என்ற உதவியாளர் அரசின் ரப்பர் ஸ்டாம்புகளை வீட்டிற்கே எடுத்துச்சென்று போலிச்சான்றிதழ்களை அச்சடித்து வினியோகித்தார் என்று பகீர் குற்றச்சாட்டு கிளம்பியது. அப்போது, அவருக்கு துணையாக செயல்பட்டவர் ஜெயக்குமார்தான்.

ஆனால், போலிச்சான்றிதழ் விவகாரம் வெடிக்க ஆரம்பித்ததும் உதவியாளர் திருக்குமார் தற்கொலை செய்துகொண்டார். அப்போதைய, பதிவாளர் சாய்பிரசாத் கட்டாய பணிவிடுப்பில் சென்றுவிட்டார். அதனால், அப்போதே சிக்கவேண்டிய ஜெயக்குமர் தப்பித்துவிட்டார். திருக்குமாரின் மறைவால் போலிச்சான்றிதழ் விவகாரமும் குழிதோண்டி புதைக்கப்பட்டது. அந்த போலிச்சான்றிதழ்கள் மட்டுமல்ல, இப்போதும் புதிய போலிச்சான்றிதழ்கள் உலாவிக்கொண்டிருக்கிறன. அதிலும், ஜெயக்குமாருக்கு தொடர்பு இருக்கிறதா? என்று விசாரிக்கப்படவேண்டும். போலி டாக்டர்கள் குறித்து புகார் கொடுத்தால் அந்த தகவல் ஜெயக்குமார் மூலம் போலி டாக்டர்களுக்கு சென்றுவிடும். தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின்படி கேள்விகள் அனுப்பினால்கூட போலி டாக்டர்களை காப்பாற்றும் விதமாக பதில் கொடுப்பவரும் ஜெயக்குமார்தான்.

இதுகுறித்து, தமிழ்நாடு இந்திய மருத்துவக்கழகத்தின் பதிவாளர் ராஜசேகர் பேசியபோது: டிவியில் பேசக்கூடிய ஸ்ரீ அருணாச்சலேஸ்வரா சித்தா அண்ட் ஆயுர்வேத வைத்தியசாலையின் உரிமையாளர் பழனி என்பவர் போலி மருத்துவர்தான். அதேபோல், 'லட்சுமி ஹெர்பல் கேர்' லட்சுமியும் போலி டாக்டர்தான். அவர்களிடம் சிகிச்சை பெறக்கூடாது. இப்படி, டிவியில் பேசக்கூடிய பெரும்பாலான டாக்டர்கள் போலி டாக்டர்கள்தான். அவர்களிடம், பொதுமக்கள் சிகிச்சைக்கு செல்லாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட, போலி டாக்டர்களை நிர்வாக இயக்குனராக கொண்ட மருத்துவமனைகளில் பணியாற்றும் ஒரிஜினல் டாக்டர்கள் மீதும் சட்டரீதியாக

நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவர்களின் மருத்துவ ஆலோசனைகளை வழங்கக்கூடாது என்று ட்ராய் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களுக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறேன். ஆனாலும். தொடர்ந்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள். போலி மருத்துவர்கள் மாநாடுகள் நடத்தவும் அனுமதியில்லை.



# ...க்கும் 'நிழல்' பதிவாளர்!

சித்தா (Bachelor of Siddha Medicine & Surgery). ஆயுர்வேதா (Bachelor of Ayurvedic Medicine and Surgery). யுனானி (Bachelor in Unani Medicine and Surgery). ஹோமியோபதி (Bachelor of Homeopathic Medicine and Surgery). நேச்சுரோபதி அண்ட் யோகா (Bachelor of Naturopathy and Yogic Sciences)

ஆகிய இந்திய மருத்துவம் படிக்காமலேயே படித்ததுபோல் பட்டங்களைப் போட்டுக்கொண்டு சிகிச்சை அளிப்பவர்கள் போலி மருத்துவர்கள். இதில், இந்திய மருத்துவப்படிப்புகளை படித்துவிட்டு தொடர்ந்து அலோபதி மருத்துவ சிகிச்சைகள் அளிப்பதும் குற்றம். பட்டப்படிப்பு படிக்காத சித்தா- ஆயுர்வேதா- யுனானி பரம்பரை வைத்தியர்களும் எங்களிடம் பதிவு செய்திருந்தால் மட்டுமே மருத்துவம் பார்க்கமுடியும். பரம்பரை வைத்தியர்களுக்கான சான்றிதழ்கள் தற்போது வழங்கப்படவில்லை. அதேபோல், வெளிமாநிலங்களில் பரம்பரை வைத்தியர்களுக்கான படிப்பை முடித்திருந்தாலும்கூட தமிழ்நாடு இந்திய மருத்துவக்கழகத்தில் பதிவுசெய்திருந்தால் மட்டுமே சிகிச்சை அளிக்கவேண்டும். இல்லையென்றால் அவர்களும் போலி மருத்துவர்கள்தான். நீங்கள் சிகிச்சைக்கு செல்லும் 'ஆயுஷ்' டாக்டர் ஒரிஜினல் டாக்டரா? போலி டாக்டரா? என்பதை அறிந்துகொள்ள தமிழ்நாடு சித்தா மெடிக்கல் கவுன்சிலின் www.tnsmc.com என்ற வெப்ஸைட்டில் சென்று பார்த்தால் INFORMATION DESK என்று வரும். அதில், DOCTOR'S SEARCH என்று வரும். அதை, க்ளில் செய்தால் Registration No கேட்கும். சம்பந்தப்பட்ட டாக்டரின் பதிவு எண்ணை பதிவு செய்துவிட்டு System of Medicine (சித்தா, ஆயுர்வேதா, யுனானி, நேச்சுரோபதி) என்ன என்று குறிப்பிடவேண்டும். Class என்ற இடத்தில் பட்டதாரி மருத்துவராக இருந்தால் 'ஏ' வையும் பரம்பரை வைத்தியர்களாக இருந்தால் 'பி' அண்ட் 'சி' யையும் என்லிஸ்ட்மெண்ட் எனப்படும் அட்டவணைப்பட்டியலில் இருந்தால் Enlistment என்றும் Search செய்தால் புகைப்படத்துடன் கூடிய டாக்டரின் விவரங்கள் வரும். அப்படி, வரவில்லை என்றால் அவர் போலி மருத்துவர் என்று அர்த்தம்" என்றவர் "போலிச்சான்றிதழ்கள் உலாவிக்கொண்டிருப்பது உண்மைதான். உதவியாளர் ஜெயக்குமாருக்கு அதில் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து விசாரித்து நிரூபிக்கப்பட்டால் சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார் .

- அகிலாண்டேஸ்வரி

# நாளொன்றுக்கு ரூ. 25 ஆயிரம் அபராதம்:

**த**கவல் அறியும் உரிமைச் சட்டத்தில் மனுதாரர் கோரும் கேள்விக்கு பதில் அளிக்க தாமதிக்கும், தவறான தகவல்கள் அளிக்கும் பொது தகவல் அலுவலர்களுக்கு அதிகபட்சம் நாளொன்றுக்கு ரூ. 25 ஆயிரம் அபராதம் விதிக்க சட்டத்தில் வழிவகை உள்ளதாக மாநில தகவல் ஆணையர்கள் ஆர்.பிரதாப்குமார், எஸ்.டி.தமிழ்குமார், எஸ்.முத்துராஜ் ஆகியோர் தெரிவித்தனர்.

## மாநில தகவல் ஆணையர்கள் தகவல்

இந்திய ஜனநாயக நாட்டில் அனைவரும் பல்வேறு அரசு துறைகளில் தேவைப்படும் பதில்களைப் பெற்று பிரச்னைகளுக்கு தீர்வு காண தகவல் அறியும் உரிமை




சட்டம் வழிவகை செய்கிறது. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனுதாரர் கோரும் கேள்விகளுக்கு சம்பந்தபட்ட அரசு பொது தகவல் அலுவலர்கள் காலம் தாழ்த்தாமலும், ஒளிவு மறைவின்றியும் பதில் வழங்க வேண்டும். மனுதாரருக்கு பதில்களை வழங்குவதில் அலைக்களிப்பு செய்யக் கூடாது.

மேலும், மனுதாரருக்கு பொது தகவல் அலுவலர்களின் பதில்கள் அதிக பக்கங்கள் கொண்டதாக இருந்தாலும், அத்தனை

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனைத்து அரசுத் துறைகளிலும், சார்நிலை அலுவலகங்களிலும் தகவல்கள் அளிக்கும் பொது தகவல் அலுவலர்களுக்கு இந்த சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில், மாநில தகவல் ஆணையர்கள் ஆர்.பிரதாப்குமார், எஸ்.டி.தமிழ்குமார், எஸ்.முத்துராஜ் ஆகியோர் தலைமை வகித்து பேசியது:

பக்கங்களையும் கட்டாயமாக வழங்க வேண்டும். பொது தகவல் அலுவலர்கள் தன்னிடம் தகவல் இல்லை என்றால் தகவல் இருக்கும் அதிகார அமைப்புக்கு மனு பெற்ற 5 நாள்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

தகவல்களை தவறானதாகவும், காலம் தாழ்த்துவதும் இருக்கும்பட்சத்தில் பொது தகவல் அலுவலருக்கு அதிகபட்சம் நாளொன்றுக்கு ரூ. 25 ஆயிரம் வரை அபராதம் விதிக்க சட்டத்தில் விதி உள்ளது.

எனவே, பொது தகவல் அலுவலர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியான நேரத்திலும், உண்மையான தகவல்களையும் மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றனர்.




வேலூர் மாவட்ட அரசு அலுவலகங்களில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட 50-க்கும் மேற்பட்ட வழக்குகள் மீது மனுதாரர், பதில் அளிக்கும் பொது தகவல் அலுவலர்களிடையே நேரடி விசாரணை நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், அனைத்து துறை பொது தகவல் அலுவலர்கள் பங்கேற்றனர்.

- அகிலாண்டேஸ்வரி


வாழ்க தமிழ்!

வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை ®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-7 இதழ்-9 பிப்ரவரி-2019**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V.அருணாசலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன், M.A.,

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசீ ஈஸ்வர் தென்காசி, N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
V.கிஷோர் குமார், சதீஷ், அகிலாண்டேஸ்வரி
குருதேவ், ஆரணி ஏழுமலை, M.முருகன்
சத்தியநாராயணமூர்த்தி, N.குப்புசாமி, முரளி
நீலகண்டன், N.சீனிவாசன், G.ஆனந்த்குமார்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாசலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக ஆலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# மக்களை ஏமாற்றும் மோசடி பட்ஜெட்



**தா**க்கல் செய்யப்பட்டுள்ள மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட் மக்களை ஏமாற்றும் மோசடி பட்ஜெட் ஆகும். பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து கடந்த ஐந்து ஆண்டுகளாக எப்படி மக்களை ஏமாற்றி வந்ததோ அதன் தொடர்ச்சியாக இந்த பட்ஜெட்டிலும் பல பொய்களை பாஜக அரசு அறிவிப்புகளாக வெளியிட்டுள்ளது.

பட்ஜெட்டின் முக்கியமான மூன்று அறிவிப்புகளாக வருமான வரி வரம்பை உயர்த்துவது, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்குதல், சிறு குறு விவசாயிகளுக்கு உதவி அளித்தல் ஆகியவை கூறப்படுகின்றன. அவை மூன்றுமே மக்களை ஏமாற்றும் நோக்கம் கொண்டவையாக உள்ளன. வருமான வரி வரம்பை ஆண்டுக்கு 5 லட்சமாக உயர்த்திவிட்டதாக பாஜக காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் வரி விதிப்பதற்கான 'சிலாப்' மாற்றப்படவில்லை. ஏற்கனவே ஆண்டுக்கு 3 லட்சம் வரை வருமானம் உள்ளவர்கள் வரி எதுவும் கட்ட வேண்டியதில்லை என இருந்தது. இப்போது அது 5 லட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அதற்குமேல் வருமானம் உள்ளவர்கள் ஏற்கனவே இருந்த சிலாபின்படிதான் வரி கட்டியாக வேண்டும். எனவே இந்த அறிவிப்பால் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்களே பயன்பெறுவார்கள்.

சிறு குறு விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. தெலுங்கானாவில் ஏக்கருக்கு 4,000 என்று ஆண்டுக்கு 8000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அந்தத் திட்டத்தை பார்த்து நகல் செய்துதான் இப்போது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது . இந்த 6 ஆயிரமும் மூன்று தவணைகளாக வழங்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. கணக்கிட்டுப் பார்த்தால் 100 நாள் வேலை செய்பவருக்கு கிடைக்கும் தொகை அளவுக்குகூட இது இல்லை.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள பென்ஷன் மிகப்பெரிய மோசடியாகும். 29 வயதுக்கு மேற்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களைப் பதிவு செய்துகொண்டு மாதம் 100 ரூபாய் கட்ட வேண்டுமாம். அவர்களுக்கு 60 வயதுக்குப் பிறகு மாதம் 3000 ரூபாய் பென்ஷன் தருவார்களாம்.

இந்தியாவில் சுமார் 40 கோடி பேர் அமைப்புசாரா தொழிலாளர்களாக உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் பதிவு செய்துகொண்டு மாதம் 100 ரூபாய் செலுத்தினால் மத்திய அரசுக்கு மாதம்தோறும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வருமானம் வரும். அரசு கொடுக்கப்போகும் பென்ஷனைவிட இது அதிகமாகும். 10

கோடி பேர் இந்த பென்ஷன் திட்டத்தால் பயன் அடைவார்கள் என்று கூறியுள்ளனர். இந்த பட்ஜெட்டில் இந்தப் பென்ஷன் திட்டத்துக்காக வெறும் 500 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.




அதைக்கொண்டு ஒரு ஆண்டுக்கு எத்தனை லட்சம் பேருக்கு பென்ஷன் தரமுடியும் ?

சுமார் 30 வருட காலம் மாதம் தோறும் 100 ரூபாய் செலுத்தி அதன்பிறகு அவருக்கு பென்ஷன் கிடைக்கும் என்று சொல்வது மிகப்பெரிய மோசடி அல்லாமல் வேறொன்றுமில்லை. தங்களால் நிறைவேற்ற முடியாத பட்ஜெட்டிலும் கூட விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்த ஒரு அறிவிப்பையும் மோடி அரசு வெளியிடவில்லை. இந்தியா முழுவதும் சுமார் 24 கோடி பேர் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் தலித் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களை முற்றிலுமாக இந்த பட்ஜெட்டில் ஒதுக்கி வைத்துவிட்டனர்.

மோடி அரசின் ஆயுட்காலம் இன்னும் இரண்டு மாதங்கள் கூட இல்லாத நிலையில் இடைக்கால பட்ஜெட் என சொல்லி தேர்தல் அறிக்கையில் சொல்ல வேண்டியதை எல்லாம் அதில் கூறியிருக்கிறார்கள். அப்படி சொல்லும்போது கூட நேர்மையாக எதையும் சொல்லவில்லை. அது பாஜகவின் மோசடி குணத்துக்கு சான்றாக இருக்கிறது.

அனைவருக்கும் அடிப்படை வருமானம் என்கிற காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் அறிவிப்பால் நிலைகுலைந்து போய் இருக்கும் மோடி அரசு மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு மோசடி பட்ஜெட்டை அறிவித்துள்ளது. இதை இந்திய மக்கள் ஒருபோதும் நம்பப்போவதில்லை. ஐந்தாண்டு காலமாக தங்களை ஏமாற்றிய பாஜக அரசுக்கு தேர்தலில் தக்க பாடம் புகட்டுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

**- அகிலாண்டேஸ்வரி**

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்.
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Contact : 93821 33334, 044 - 4861 5321



விவசாயிகள் அனைவரும் வங்கிகளிலிருந்து மட்டும் கடன் வாங்கி விவசாயம் செய்வதில்லை. வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் பெற்றுப் பெரும்பாலானவர்கள் விவசாயம் செய்யும் நிலை இன்று வரை நிலவுகிறது. உதாரணமாக, டாக்டர் ரெங்கராஜன் தலைமையின் (2008) கீழ் அமைக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய நிதி வழங்கல் குழுவானது, ஏறக்குறைய 66% குறு மற்றும் சிறு விவசாயிகள் வங்கிக் கடன் கிடைக்காமல், வட்டிக் கடைக்காரர்களிடம்

# விவசாயிகளுக்கு நேரடிப் பணவரவுத் திட்டம்:

## தெலங்கானாவைப் பார்த்தாவது திருந்துங்கள்!

கடன் பெறுவதாகக் கூறியுள்ளது. அரசு அறிவிக்கும் கடன் தள்ளுபடித் திட்டத்தால் இது போன்ற விவசாயிகளுக்கு எந்த நன்மையும் ஒருபோதும் கிடைப்பதில்லை.

மத்திய அரசின் கீழ் இயங்கும் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அமைப்பால், நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் நடப்பு நிலைமையைக் கண்டறிய 2012-13-ல் நடத்தப்பட்ட ஆய்வின்படி, வெறும் 23% விவசாயிகள் மட்டும் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுள்ளதாகவும் மீதமுள்ள விவசாயிகள் வங்கியல்லா தனியார் வட்டிக் கடைகளில் கடன் வாங்கியுள்ளார்கள் எனக் கூறுகிறது. இன்னும் சொல்லப்போனால், வெறும் 14% குறு விவசாயிகளும் 24% சிறு விவசாயிகளும் மட்டுமே வங்கி சார்ந்த துறைகளிலிருந்து விவசாயக் கடன் பெற்றுள்ளார்கள். இதே போன்று, நபார்டு வங்கியால் இந்தியா முழுவதும் 2016-17-ல் நடத்தப்பட்ட ஆய்வின்படி, வெறும் 30.3% விவசாயிகள் மட்டுமே வங்கி போன்ற அமைப்புகளிடமிருந்து கடன் பெற்றுள்ளதாகக் கண்டறிந்துள்ளது.

கடன் தள்ளுபடி செய்வதால் பல ஆண்டுகளாக விவசாயிகள் சந்தித்துவரும் போதிய வருமானமின்மை மற்றும் கடன் சிக்கல் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பது இப்போது தெள்ளத் தெளிவாகிறது. ஏறக்குறைய அனைத்து விவசாயிகளும் தற்போது பொருளாதாரச் சிக்கலில் உள்ளார்கள். எனவே, அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் வருமான உதவித் திட்டங்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இவற்றைக் கருத்தில்கொண்டு, கடந்த 2018 முதல் தெலங்கானா மாநில அரசு, அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் 'ரயத்து பந்து' என்ற நேரடிப் பணவரவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், ஒரு ஏக்கர் நிலத்துக்கு, ஒரு பயிர்க் காலத்துக்கு ரூ.4,000 வீதம், ஆண்டுக்கு இருமுறை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுவருகிறது. அதாவது, ஒரு ஏக்கர் நிலமுள்ள விவசாயிக்கு, ஆண்டுக்கு ரூ.8,000 இத்திட்டத்தினால் நேரடியாக அவருடைய வங்கிக் கணக்கில் சேர்ந்துவிடுகிறது. இத்திட்டம் அனைத்து தெலங்கானா விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது மட்டுமல்லாமல், நடந்து முடிந்த தேர்தலில் ஆளும் கட்சியின் வெற்றிக்கு உதவியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இதுபோன்ற நேரடிப் பணவரவுத் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்துவதன் மூலமாகக் கடன் தள்ளுபடித் திட்டம்போல் அல்லாமல், அனைத்து விவசாயிகளும் பயன்பெறச் செய்ய முடியும். இத்திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்த எவ்வளவு தொகை தேவைப்படும் என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகிறது. இந்தியாவின் தற்போதைய நிகர சாகுபடிப் பரப்பு ஏறக்குறைய 140 மில்லியன் ஹெக்டேர்களாகும். தெலங்கானா மாநிலத் திட்டத்தைப் போல, ஒரு ஹெக்டேருக்கு (சுமார் இரண்டரை ஏக்கர்) ரூ. 20,000 வீதம் நேரடிப் பணவரவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டால், இத்திட்டத்தை ஓர் ஆண்டுக்கு அமல்படுத்த ஏறக்குறைய ரூ. 2.80 லட்சம் கோடி தேவைப்படும்.



நேரடிப் பணவரவுத் திட்டம், கடன் தள்ளுபடித் திட்டதை விட விவசாயிகளுக்குப் பல நன்மைகளைக் கொடுக்கும். இத்திட்டத்தால் வங்கி மற்றும் வங்கியில்லா வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து கடன் பெற்றுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உதவும். பணவரவுத் திட்டத்தை ஒவ்வொரு முறையும் பயிர்செய்யும் காலத்தில் கொடுப்பதால், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இடுபொருட்களை வட்டிக் கடைக்காரர்களிடம் நிற்காமல் தங்கு தடையின்றி வாங்கி உபயோகிக்க முடியும். இது மொத்த சாகுபடிச் செலவைக் குறைப்பதற்கும் பெரும் உதவியாக இருக்கும். தனியாரிடம் கடன் பெற்று விவசாயம் செய்வதால், அறுவடை முடிந்தவுடன் பொருட்களை விற்றுக் கடன்கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தால், குறைந்த விலைக்குப் பொருட்களை விற்க வேண்டிய சூழலுக்கு விவசாயிகள் தள்ளப்படுகிறார்கள். இது போன்ற விவசாயிகளுக்கு ஏற்படும் நெருக்கடிகளை, இத்திட்டத்தால் கணிசமாகக் குறைக்க முடியும். தள்ளுபடித் திட்டத்தால் வங்கிகளுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்படுகின்ற தேவையில்லா பிணக்கத்தையும், இத்திட்டத்தின் மூலமாகக் குறைத்து, விவசாயிகளுக்கான வங்கிச் சேவையையும் செம்மைப்படுத்த முடியும். வங்கிக் கடன்களை வட்டியுடன் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய விவசாயிகளும் இத்திட்டத்தால் பயன் பெறுவர்.

நிரந்தர நேரடி வருமான உதவித் திட்டங்கள் இல்லாமல், தற்போது விவசாயிகள் சந்தித்துவரும் பல்வேறு பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவருவது மிகவும் கடினம். விவசாயச் சந்தையின் போக்கு ஒருபோதும் விவசாயிகளுக்குச் சாதகமாக இருந்ததில்லை. எனவே, விவசாயிகள் உற்பத்திசெய்யும் பொருட்களுக்கு அவர்களால் சந்தையில் எப்போது விலை நிர்ணயம் செய்யும் சூழல் ஏற்படுகிறதோ, அதுவரையிலும் நிரந்தர நேரடி வருமான உதவித் திட்டங்கள் இல்லாமல் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது கடினம். தெலங்கானாவில் அமல்படுத்தப்பட்டுள்ள நேரடிப் பணவரவுத் திட்டம்போல் இந்தியா முழுவதும் அமல்படுத்தப்பட்டால், விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

**- கனகதுர்கா**

முனைவர் ஆ.மவுரியன்





வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(16)

# அம்புஜம்மாள்

## கள்ளுக்கடை மறியல், அன்னிய துணி மறுப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்

அம்புஜமாளின் தந்தை பின்னர் அனுமதி வழங்க அவர் வார்தா சென்றார். அவருடைய தந்தை மரிக்கவும் சென்னைக்கு வந்தார். காந்திஜியின் அறிவுரைப்படி ஓர் இல்லம் தொடங்கினார். சகோதரனின் இடத்தில் கையில் இருக்கும் பணம் கொண்டு ஆரம்பித்த நிறுவனம்தான் சீனிவாசகாந்தி நிலையம். ஆதரவற்றவர்களுக்குக் கல்வி, தொழில்கல்வி கற்றுக் கொடுக்கும் நிறுவனமாக வளர்ந்தது.

இத்தகைய சிறந்த பெண்மணி தமிழ்நாடு சமூக நல வாரியத்தில் ஏழு ஆண்டுகள் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

மாநில வாரியம் மத்திய வாரியத்தின் கிளையாகும். எல்லா மாநிலங்களிலும் கிளைகள் தொடங்கப்பட்டன. தமிழகத்தில் இந்த வாரியமும் மகளிர் நலத்துறையுடன் இணைக்கப்பட்டது. பின்னர் அதன் தலைவி நியமனத்தாலும், அதன் செயலாளர் மகளிர் நலத்துறை இயக்குனர் என்றும் அமைக்கப்பட்டது. மாவட்டங்களிலும் ஓர் நியமனத் தலைவி இருப்பார். அந்த மாவட்ட மகளிர் நல அதிகாரி அதன் செயலாளராவார். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்தும் பஞ்சாயத்து தலைவர்களால் நியமிக்கப்பட்ட ஓர் பெண் பிரதிநிதி இதன் அங்கத்தினராவார். அந்தந்த மாவட்டங்களின் தேவைகள், ஏற்கனவே இருக்கும் நிறுவனங்களின் பணிகளின் முன்னேற்றம் இவைகளை அடிக்கடி ஆய்வு செய்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கும்.

இந்த இடத்தில் ஓர் உண்மை சொல்ல வேண்டும். மாநில வாரியத்தைப் போல் மாவட்ட அமைப்புகள் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டன என்று கூற

மாட்டேன். அங்கே பணியாற்றும் மாவட்ட அதிகாரியுடன் அந்தத் தலைவிக்கும் உள்ள தொடர்பின் வலிமையைப் பொறுத்து அதன் இயக்கமும் அமையும்.

மாநில வாரியத்தில் சிறப்பு உறுப்பினர்களும் சேர்க்கப்படுவார்கள். மாநில அளவில் திட்டங்கள் ஆய்வு செய்யப்படும்.

வடஆற்காடு மாவட்ட அதிகாரியாக நான் இருந்த பொழுது மாவட்ட அளவில் ஓர் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தேன். அதற்கு திருமதி அம்புஜம்மாள், திருமதி சரோஜினி வரதப்பன் வந்திருந்தனர். அப்பொழுது இயக்குனராக இருந்த மிஸ். ரமேஷ், ஐ.ஏ. எஸ் அவர்களும் வந்திருந்தார். மாவட்டத்தின் தலைவியின் பெயர் திருமதி பங்கஜம் ஆவார்.

மாவட்ட ஆட்சியாளரின் மனைவி திருமதி பானுமதி அவர்களும் வந்து கலந்து கொண்டார். எப்பொழுதும் மாவாட்டப் பணிகளில் மாவட்ட ஆட்சியாளின் மனைவியையும் பங்கு கொள்ள வைப்போம். இந்த அமைப்பால் பிரச்சனைகள் ஏற்படும்பொழுது ஆட்சி யாளரிடம் தகவல் சீக்கிரம் போய் பிரச்சனைகளுக்கு விடிவு பிறக்கும். இந்த ஒருங்கிணைப்பு முறை மிகச் சிறந்த அளவில் உதவி செய்தது என்பதை மறத்தல் முடியாது.

இது போன்று ஏற்பாடு செய்யப்படும் சிறப்புக் கூட்டங்களில் மாவட்டம் முழுவதும் நியமிகப்பட்ட பெண்கள் மட்டுமல்ல பல மகளிர் மன்றக் கன்வீனர்களும் கலந்து கொள்வர். இதற்கு அரசு நிதி உதவி கிடையாது. பந்தல் அலங்காரம் போன்றவைகள் கிடையாது. ஓர் அரங்கம் வேண்டும். ஏதாவது ஓர் இடத்தை இலவசமாகப் பெறுவோம். மைக், மாலைகள் இவைகளுக்குச் செலவு கொஞ்சம்தான். சாப்பாட்டுக் கடைகூட வைக்க மாட்டோம். இந்தச் செலவை ஏதாவது ஓர் தொண்டு நிறுவனம் ஏற்றுக் கொள்ளும். அரிமா சங்கம் போன்ற பன்னாட்டு அமைப்பின் கிளைகளையும் சேர்த்துக் கொள்வோம்.

ஒருங்கிணைப்பின் ஒற்றுமையைக் காணலாம். எக்காரியமும் ஒன்றுபட்டுச் செய்யும் பொழுது அது சக்தி வாயந்ததாக இருக்கும். தலைமையில் இருப்பவர்க்குத் திறமை மட்டும் இருந்தால் போதாது. நேர்மையும் இருத்தல் வேண்டும்.

திருமதி அம்புஜம்மாள் அதிகம் படிக்காதவர். ஆனால் பின்னர் அவராகக் கற்றுக் கொண்டது நிறைய. காந்திஜியின் அறிவுரையின்படி மொழி பெயர்ப்பு நூல்கள் எழுதினார். பத்மஸ்ரீ பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

அவர் ஓர் வேலையில் கவனமாக இருக்கும் பொழுது பார்த்தால் அவரது வேகம் தெரியும். அனதாரவாய் வருபவரிடம் முதலில் கேள்விகள் கேட்காமல் உணவளித்து இருக்க இடமளித்து வந்தவரின் நிலை அமைதியான பின்தான் பிரச்சனைகளைக் கேட்கச் சொல்வார். அலுவலக அதிகாரி போல் அங்கே செயல்படக் கூடாது. அன்பு அன்னையாய் இருக்க வேண்டும்.

- தொடரும்



# இனியாவது திருந்துமா தமிழகம்?

தமிழகத்தில் 4,800க்கும் மேற்பட்ட டாஸ்மாக் கடைகள் உள்ளன. அரசுக்கு அதிக வருவாய் ஈட்டி தரும் துறைகளில் டாஸ்மாக் முதலிடத்தில் உள்ளது. சாதாரண நாட்களில் ரூ.75 கோடி முதல் ரூ.85 கோடி வரையிலும், விடுமுறை தினங்களில் ரூ.90 கோடி வரையிலும் மது விற்பனையாகிறது. ஆனால், இந்த விற்பனை தீபாவளி, பொங்கல், புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகை காலங்களில் அதிகரிக்கும். கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது 4 நாட்கள் விடுமுறையில் ரூ.602 கோடிக்கு மதுவிற்பனை நடந்தது. இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை 5 நாட்கள் விடுமுறையில் ரூ.735 கோடிக்கு மதுவிற்பனையாகி உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளை ஒப்பிடும்போது இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை விடுமுறையில் மது விற்பனை அதிகரித்துள்ளது. ரூ.750 கோடிக்கு மது விற்பனை நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. இதை எட்டும் வகையில், ரூ.735 கோடிக்கு மது விற்பனை நடந்துள்ளது. மதுரை மண்டலத்தில்தான் அதிகமாக மதுவிற்பனையாகி உள்ளது. நாட்டிலேயே மது விற்பனை மூலம் வருவாய் ஈட்டுவதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. கடந்த 2017-18ம் நிதியாண்டில் 26,794 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

இதற்கு அடுத்த இடத்தில் அரியானா, மகாராஷ்டிராவும் இடம்பெற்றுள்ளன. மது விற்பனையில் முதலிடம் பெற்றுள்ளது என்று சொல்லிக் கொள்வதில் பெருமை எதுவும் இல்லை. நாட்டில் பீகார், குஜராத் உள்பட 7 மாநிலங்களிலும் யூனியன் பிரதேசத்தில் லட்சத்தீவுகளிலும் மதுவிலக்கு அமலில் உள்ளது. பீகாரில் மதுவிலக்கு அமல்படுத்திய பின்னர் கொலை, கொள்ளை, வன்முறைகள், சாலை விபத்துகள் குறைந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சட்டப் பேரவை தேர்தலின்போது, வலுவாக இருந்தது.

ஆனால், தேர்தலுக்கு பின்னர் அந்த கோரிக்கை நீர்த்துபோனது. அதன் விளைவு தமிழகத்தில் மது குடிப்போர் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால், சமுதாயத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து வெளியாகும் தகவல்கள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. மாநிலத்தில் 50 வயதுகளில் இறப்போரின் எண்ணிக்கை சமீப ஆண்டுகாலமாக அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதற்கு பிரதான காரணமாக குடிப்பழக்கம்தான் என்று குற்றஞ்சாட்டுகின்றனர். மதுவிலக்கு அமல்படுத்தவில்லை என்றாலும் மதுவை 'ஹெல்த்டிரிங்' ஆக மாற்றலாம்.

உடல் நலத்திற்கு கேடுவிளைவிக்காத வகையில் மதுபானம் தயாரிப்பு மற்றும் விற்பனையை அரசு உறுதி செய்யலாம். மது குடிப்போருக்கு ஏற்படும் உடல் நலக்குறைபாடுகளுக்கு அவர்கள் சிகிச்சை பெறும் வகையில் காப்பீடு வசதி செய்து கொடுக்கலாம் என்று மதுகுடிப்போர் கூறுகின்றனர். இவர்களின் கோரிக்கையில் பொருள் உள்ளது. வருவாய் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு மதுவிற்பனையை இலக்கு நிர்ணயம் செய்து விற்பது என்பது ஏற்புடைய செயல் அல்ல என்று சமூக ஆர்வலர்கள் கூறுவதில் அர்த்தம் உள்ளது. சமுதாயத்தில் இளைஞர்களை மரணக்குழிக்குள் தள்ளும் இந்த செயலை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டால் சரி.

- வீ.சிவசங்கரன்



# தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்!

பொதுவாக தந்தைகளின் இறுதிக் காலம் பெரும்பாலும் மௌனத்திலும், தனிமையிலும் சில சமயம் ஒதுக்கி வைக்கப்பட்டும், புறக்கணிப்பிலும் கழிய நேரிடுகிறது என்பது வருத்தத்துக்குரியது.

இதனால்தான் தந்தைமார் தாம் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் முற்றாக ஒய்வு பெற்று மூலைக்கு செல்வதற்கு முன்னர் மரணித்துவிட வேண்டும் என்றும் நினைக்கின்றனர்.




குடும்பத்துக்காக உழைத்து உழைத்து ஓடான பின்னர் அவரை கௌரவமாக வாழ வழி செய்ய வேண்டும். மூலையில் இருத்தி, மௌனத்தில் ஆழ்த்தி, மூன்று வேளையும் சாப்பிட்டுவிட்டு பேசாமல் கிடந்தால் போதும் என்ற மனப்பான்மையுடன் தான் பல பிள்ளைகள் தந்தைமாரை நடத்தி வருகின்றனர்.

வயதான தந்தை தன் குடும்பத் தினரிடமிருந்து மிகக் கொஞ்சமாகத்தான் கேட்பார். ஏனெனில் கேட்டுப் பழகாத குடும்பத் தலைவராக இருந்தவர். கொடுக்க மட்டுமே தெரிந்து வைத்திருந்தவர். எனவே வயதான காலத்தில் வாய்திறந்து கேட்க மாட்டார். குடும்பத்தினர் தான் அவரின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைக்க வேண்டும்.

மது அருந்தும் பழக்கம் உள்ளவரானால் மாதமொன்றுக்கு இவ்வளவு என வழங்குங்கள். வாசிக்கும் பழக்கம் உள்ளவரானால் குறைந்த பட்சம் வாரப் பத்திரிகையாவது வாங்கிக் கொடுங்கள். சில்லறைச் செலவுகளுக்காக கொஞ்சம் பணமும் கொடுங்கள். மூலையில் அமர்த்தாமல் சிறிய வேலைகளைக் கொடுங்கள். பேரன் பேத்திகளை அவரிடமிருந்து பிரிக்காதீர்கள். அவர்கள் தந்தையால் கொண்டாடப்படும் செல்வங்கள்.

குடும்பத் தேவைகளைப் பார்த்து பார்த்து செய்தவருக்கு, இப்போது உங்கள் காலம், பார்த்துப் பார்த்துச் செய்வதற்கு. ஒருவர் மறைந்த பின்னர், அதைச் செய்யவில்லையே, இதைச் செய்திருக்கலாமே என்று எண்ணிப் புலம்புவதைவிட அவர் உயிருடன் இருக்கும்போதே தந்தையின் இறுதி காலம் அமைதியாகக் கழிவதற்கு வழி செய்யுங்கள்.

வயதானவர்களுக்கு தனிமை மிகக் கொடுமையானது. ஒரு சிறிய வானொலியை வாங்கிக் கொடுங்கள். முடிந்தால் தனி டி.வி இல்லையேல் உங்களுடன் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்க விடுங்கள்.

தன் மனைவியை இழந்த தந்தையின் தனிமை மிகமிகக் கொடுமையானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பெண் ஒரு கணவனை இழந்தால் அவரால் அதை ஜீரணித்து தன் பிள்ளைகளுடன் போய்ச் சேர்ந்து கொள்வாள். பெண் சூழலுக்கு ஏற்றாற்போல வளைந்து கொடுப்பாள்.

குடும்பத் தலைவன், அதிகாரம் செலுத்தியவன், சம்பாதித்தவன், பிறர் மதிப்புக்கு உரியவன் என்றெல்லாம் வாழ்ந்து விட்ட தந்தை, தன் அதிகாரமும், அன்பும், நெருக்கமும், காட்டக் கூடிய மற்றும் என வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளக் கூடிய மனைவியை இழந்தபின் கையறு நிலைக்கு ஆளாகி விடுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இவற்றை உணர்ந்து தந்தைக்கு மரியாதை செய்யுங்கள். அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர்!

சிறப்புப் பார்வை

# அரசு ஊழியர்கள் அதிக ஊதியம் வாங்குகிறார்களா?





அரசு என்பது அமைச்சர்களும் உயர்மட்ட அதிகாரிகளும் மட்டுமல்ல; அரசின் எந்தவொரு திட்டத்தையும் அடிமட்டத்தில் செயலாக்குபவர்கள் ஊழியர்களே. கொள்கை வகுத்தலும், திட்டமிடுதலும், நிதி ஒதுக்குதலும் மட்டுமே அரசின் உயர்மட்டத்தில் நடைபெறுகின்றன. அமல்படுத்தும் முழுச் சுமையும் ஊழியர்கள் தலையிலேயே சுமத்தப்படுகிறது. உதாரணமாக, சுகாதாரத் துறையில் பல்வேறு அடுக்குகள் இருந்தபோதும், இறுதியாக ஒரு பகுதியைச் சுகாதாரமாக வைத்திருப்பது அங்குள்ள குப்பைகளையும், சாக்கடைகளையும் அகற்றும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களே. அந்தப் பணியைச் செய்யவில்லை என்றால் திட்டமிடல், நிதி ஒதுக்குதல், கண்காணித்தல் என்கிற எந்த அடுக்கினாலும் பலன் இல்லை.

இந்தியாவில் ஏராளமான அரசு ஊழியர்கள் தேவையின்றி இருப்பது போன்ற பிரச்சாரங்கள் தொடர்ச்சியாகச் செய்யப்பட்டுவருகின்றன. ஒரு நாட்டின் மக்கள்தொகைக்கும் ஒவ்வொரு துறையிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமே அந்த நாடு மேம்பட்ட சேவையை வழங்குகிறதா என்பதற்கான அளவுகோல். 2011-ம் ஆண்டுக் கணக்கின்படி இந்தியாவில் ஒரு லட்சம் பேரில் 1,622.8 அரசு ஊழியர்கள் பணிசெய்கிறார்கள். இந்த எண்ணிக்கை தற்போது குறைந்திருக்கக் கூடும். 2011-ம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி அமெரிக்காவில் ஒரு லட்சம் பேரில் 7,681 பணியாளர்கள் சேவை செய்கின்றனர். மத்திய அரசுப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் 2011-ம் ஆண்டு 24.63 லட்சம் பேர். மாநில அரசு ஊழியர்கள் 72.18 லட்சம் பேர். இந்த எண்ணிக்கையில் ரயில்வேயில் பணிபுரியும் 14 லட்சம் பேரும் அடங்குவர். அதாவது, ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 125 மத்திய அரசு ஊழியர்கள் மட்டுமே இருப்பார்கள்.

சமூக மாற்றத்தில் அரசின் சேவையை மக்களிடம் கொண்டுசேர்க்கும் திறன் மிக முக்கியமானது. கல்வி, மருத்துவம், சுகாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்ட நாடுகள் அல்லது மாநிலங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டால், அவற்றின் ஊழியர் விகிதம் அதிகமாகவே உள்ளது. தமிழ்நாட்டில் மொத்த மக்கள்தொகை ஏறத்தாழ 8 கோடி. தமிழகத்தில் உள்ள மாநில அரசு ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 12 லட்சம். அதாவது, ஒரு

லட்சம் பேருக்கு வெறும் 1,500 ஊழியர்கள் மட்டும்தான்.

தமிழ்நாடு அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் 71% ஊழியர்களின் சம்பளத்துக்கே கொடுக்கப்படுகிறது என்கிற தோற்றத்தை உருவாக்குகிறது அரசு. உண்மையில், இந்தத் தொகை 50%-க்கும் குறைவாகும். 7-வது ஊதியக் குழு குறைந்தபட்ச சம்பளம் ரூ.18,000-மாவது இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று அரசு ஊழியர்களின் சம்பளம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அப்போது முதல்வர் பழனிசாமி புதிய சம்பள விகிதத்தின்படி குறைந்தபட்ச ஊதியம் ரூ. 6,000-த்திலிருந்து ரூ. 15,700 ஆகவும், அதிகபட்ச ஊதியம் ரூ.77,000-லிருந்து ரூ.2,25,000ஆகவும் உயரும் என்றும் அறிவித்தார்.

அதாவது, உயரதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒரு மாத ஊதிய உயர்வு, கீழ்நிலையில் உள்ள 15.4 பேரின் உயர்வுக்குச் சமமாகும். அதேபோல கீழ்நிலையில் உள்ள ஒருவரின் மாதச் சம்பளத்தைப் போல, மேல்நிலையில் உள்ள ஒருவருக்குக் கிடைத்த மாத உயர்வு மட்டும் 9.42 மடங்காகும். இந்த ஒரு உதாரணம் மட்டும் ஒட்டுமொத்த நிலைமையை உணர்த்துவதாக இருக்கும். ஆரம்ப நிலையில் கீழ்மட்டத்தில் இருக்கும் ஒருவரின் சம்பளமும், உயர்மட்டத்தில் இருக்கும் ஒருவரின் சம்பளமும் 1:14.33 என்ற விகிதத்தில் உள்ளது. இந்த மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுதான் ஒட்டுமொத்தமான சம்பள விகிதம் மிக அதிகம் என்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இதைப் பயன்படுத்தியே அதிகாரப் பணி நிலையில் உச்சத்தில் இருப்பவர்கள், கீழ்மட்டத்தில் இருப்பவரது நியாயமான கோரிக்கைகளை மறுக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையே சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. அந்தச் சம்பள உயர்வில் குறிப்பிட்ட பகுதியை மறுப்பது ஆறாவது ஊதியக் குழு பரிந்துரையை அமல்படுத்தும்போது ஜெயலலிதா தொடங்கியது. இதைத்தான் வழக்கம் என்று சொல்லி அமைச்சர் ஜெயக்குமார் நியாயப்படுத்துகிறார். ஊதிய உயர்வு அளிப்பது என்று முடிவுசெய்துவிட்ட பிறகு, ஒரு தேதியைக் குறிப்பிட்டு அதிலிருந்து ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது என்று பொதுவாக அறிவித்துவிட்டு, பல மாதங்கள் அந்த உயர்வுக்கான பணத்தைச் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குக் கொடுக்காமல் இருப்பது ஏமாற்றமாகும். ஆரம்பத்தில் தனியார் முதலாளிகள் செய்த இத்தகைய நடவடிக்கையை வேடிக்கை பார்த்த அரசுகள் இப்போது தாங்களும் அதே காரியத்தைச் செய்வது கொடுமையானது.

கடந்த 6-வது ஊதியக் குழு பரிந்துரையின்போது 12 மாதங்கள் அரசு ஊழியர்களின் நிலுவைத் தொகையைத் தர மறுத்த அரசாங்கம், அதே நடைமுறையை இந்த முறை 21 மாதங்களுக்கு நீட்டித்து நியாயப்படுத்தவும் செய்கிறது. ஆனால், ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் நீதித் துறை அதிகாரிகள் இந்த 33 மாத நிலுவைத் தொகையையும் பெற்றுவிட்டார்கள். தனியார் நிறுவனங்கள் போதுமான சம்பளம் தரவில்லை என்பதைத் தட்டிக்கேட்டுச் சரிசெய்ய வேண்டிய அரசாங்கம், அவர்கள் குறைவாகக் கொடுக்கிறார்கள், நாங்கள் அதிகமாகத் தருகிறோம் என்ற வாதத்தை முன்வைக்கிறது. போராடும் ஊழியர்களுக்கு எதிராகப் பொதுமக்களையும், இதர வேலை தேடும் பிரிவினரையும் தூண்டிவிடுகிறார்கள்.

இப்போது மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மையே. ஆனால், இதற்கு முழுக் காரணம் அரசு மட்டும்தான். உரிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்களோடு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும். மாநில அரசின் இன்றைய நிதிநிலைக்குக் காரணம் மத்திய அரசு வரிவருவாயைப் பெரும் பகுதி அள்ளிக்கொண்டு போனதுதான். அதைக் கேட்பதற்கும், பெறுவதற்கும் செய்யாமல், அரசு ஊழியர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை மாநில அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

-A.C. குமார்




# சிந்தனை முத்துக்கள்







ஒவ்வொரு மனிதனும் இந்த உலகத்தையே மாற்ற வேண்டும் என்னு நினைக்கிறார்கள். ஆனால் ஒருவர் கூட தங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைப்பது இல்லை!



















பணமிருக்கும் மனிதரிடம் மனமிருப்பதில்லை
மனமிருக்கும் மனிதரிடம் பணமிருப்பதில்லை
பணம் படைத்த வீட்டினிலெ வந்ததெல்லாம் சொந்தம்
பணமில்லாத மனிதருக்கு சொந்தமெல்லம் துன்பம்

– கண்ணதாசன்

யார் மனதும்
என்னால்
புண்பட்டுவிட கூடாது
என்பதில் நான்
கவனமாக
இருக்கின்றதாலோ
என்னவோ
என்
மனதை புண்படுத்த
போட்டி போட்டு
நிற்கிறார்கள்
பலர்




தொட்டிலில் பிறந்து கால்
இல்லா கட்டிலில் சென்று
ஆளில்லா காட்டிலில்
தூங்கத்தான் இத்தனை
ஆட்டமும்..

உங்கள் கௌரவம்
வேறெங்கும் இல்லை;
உங்கள் நாக்கின்
நுனியில்
தான் உள்ளது!

# பிளாஸ்டிக் மீதான தடை: பெயரளவிலான நடவடிக்கையா?



பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தமிழக அரசு விதித்திருக்கும் தடை ஜனவரி 1 முதல் அமலுக்கு வந்திருக்கிறது. சுற்றுச்சூழலுக்குப் பேராபத்தை விளைவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு முடிவுகட்டும் வகையில் தமிழக அரசு எடுத்திருக்கும் இந்த நடவடிக்கை வரவேற்புக்குரியது; காலத்தின் கட்டாயம்.

பிளாஸ்டிக் கழிவுகளை உற்பத்திசெய்வதில் சென்னை முதலிடத்தில் இருக்கும் சூழலில், தமிழகத்தில் 2002-லேயே பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் சட்டத்தை அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கொண்டுவந்தார். எனினும், அடுத்த ஆண்டே இந்தச் சட்டத்தை அவர் திரும்பப் பெற்றது இந்த முயற்சிக்குப் பின்னடைவைத் தந்தது. இப்போது பிளாஸ்டிக் மீதான தடை உயிர்ப்பிக்கப்பட்டிருக்கும் சூழலில், மக்களின் அன்றாட வாழ்வில் பிரதான இடம்பிடித்துவிட்ட பிளாஸ்டிக்குக்கு மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தும் பொறுப்பை மக்கள் வசம் ஒப்படைத்துவிட்டு, அரசு ஒதுங்கிக்கொள்வது ஏற்கத்தக்கதல்ல. பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யாமல் இத்தகைய தடைகளை நிறைவேற்றுவது அறமுமல்ல.

இந்தத் தடையை அரசு எப்படி அமலாக்கப்போகிறது என்பதை எல்லோருமே கவனிக்கின்றனர். தடையை நடைமுறைப்படுத்துவதில் இருக்கும் சிக்கல்களைக் களைய அரசு முற்படும்போது, நமக்கு முன்னர் இந்தத் தடையை அமலாக்கிய மாநிலங்களில் அவர்கள் எத்தகைய வியூகங்களைக் கையாண்டிருக்கிறார்கள், எங்கெல்லாம் இன்னமும் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள் என்பதைக்

கவனத்தில் கொள்வது அவசியம். ஓர் உதாரணம், இப்படியான தடைகள் விதிக்கப்படும்போது, சட்டவிரோதமாக இந்தப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்கப்படுவதற்கு வாய்ப்புகள் மிக அதிகம்.

சமீபத்தில் பிளாஸ்டிக் தடை அமல்படுத்தப்பட்ட மகாராஷ்டிரத்தில் வாடிக்கையாளர்களுக்குக் கைப்பிடி இல்லாத பிளாஸ்டிக் பைகளை வியாபாரிகள் வழங்குவது தெரியவந்திருக்கிறது. இது தொடர்பான தெளிவான சட்ட விதிமுறைகள் இல்லாததன் விளைவே இது என்று சுட்டிக்காட்டுகிறார்கள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்.

இதுவரை 25 மாநிலங்கள் பிளாஸ்டிக்கைத் தடைசெய்திருக்கின்றன. 1998-ல் நாட்டிலேயே முதன்முறையாக பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை விதித்தது சிக்கிம். 20 ஆண்டுகளில் எப்படி அங்கு பிளாஸ்டிக் தவிர்ப்பு ஒரு கலாச்சாரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது என்பது தமிழகம் படிக்க வேண்டிய முக்கியமான பாடம்.

அன்றாடப் பயன்பாட்டின் அங்கமாகிவிட்ட பிளாஸ்டிக்கைப் போல் மலிவான, எளிதாக எடுத்துச்செல்லக்கூடிய மாற்றுப்பொருட்கள் தயாரிப்பை அரசு முதலில் ஊக்கப்படுத்த வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரிப்பது, புழக்கத்தில் இருக்கும் பிளாஸ்டிக் பொருட்களை மறு சுழற்சி செய்வது ஆகியவற்றில் அரசு புதிய சிந்தனைகளுடன் ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளுக்குத் தயாராக வேண்டும். பேச்சளவில் மட்டும் அல்லாமல், முழுமையாக இந்தத் தடை அமல்படுத்தப்படுவதற்கு அனைத்துத் தரப்புகளின் ஒத்துழைப்பு அவசியம். அரசு அதை நோக்கி நகர வேண்டும்!

பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்துள்ள தமிழக அரசு தற்போது அதனை பிஸ்கட், சாம்பு, சாக்லேட் பாக்கெட்டுகளுக்கும் பிளாஸ்டிக் தடையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படுத்தும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தமிழக அரசு தடை விதித்திருக்கிறது.

அன்றாடம் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கேரிபேக், டீ கப், தண்ணீர் பாக்கெட், ஸ்டிரா, பிளாஸ்டிக் தட்டு உள்ளிட்ட 14 வகையான பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கு மாற்றாக துணிப்பை, கண்ணாடி டம்ளர், வாழை இலை, தையல் இலை, பனை ஓலை, பாக்கு மட்டை போன்றவற்றை பயன்படுத்தலாம் என அரசு மற்றும் பிற அமைப்புகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பிளாஸ்டிக் தடை உத்தரவு அமலாகிவிட்டால் அவற்றுக்கு மாற்றாக பரிந்துரைக்கப்படும் பொருட்களின் விற்பனையும் அதிகமாகியுள்ளது. இந்நிலையில், தமிழக அரசு பிஸ்கட், சாம்பு, சாக்லேட் போன்றவற்றையும் பாலித்தீன் பாக்கெட்டுளில் விற்பனை செய்வதற்குத் தடை விதிப்பது புற்றி பரிசீலித்து வருகிறது என தகவல் கிடைத்துள்ளது.

-V. அருணாசலம்

# சாகாக் கலை எனப்படும் காயகல்பம்



வில்வம் கற்ப மூலிகைகளுள் ஒன்றாகும். உடலுக்கு வலுவைக் கொடுத்துநோயின்றி காக்கும் சிறந்த மூலிகை வில்வம். இது இந்தியா முழுவதும்காணப்படும் மரவகையாகும். சைவ கடவுளான சிவனை வில்வ இலை கொண்டே பூஜைசெய்கிறார்கள். உடல் சூட்டைத் தணிக்கும் குணம் வில்வ இலைக்கு உண்டு.

இதற்கு சிவத்துருமம், குசாபி, கூவிளம், கூவிளை, மாதுரம், நின்மலி என பல பெயர்கள் உண்டு.

இதன் இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின், பட்டை, ஓடு வேர்ப்பட்டை அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டது.

கற்ப முறைப்படி வில்வத்தின் சமூலத்தை சாப்பிட்டு வந்தால் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் பெறலாம்.

**பல்லவம்பூ பிஞ்சின் பழநிரியம்சம் முறையே**

**வல்லவம் மேகமந்த மாகுன்மம்- செல்லுகின்ற**

**நோக்மருள் விந்துநட்ட நூறு மகுத்தவர்கட்**

**காக்கமருள் வில்லுவத்தி லாம்**

(அகத்தியர் குணபாடம்)

பொருள் - வில்வத்தளிர் எல்லா மேக நோய்களையும் குணப் படுத்தும்.

**வில்வப் பூ** - மந்தத்தைக் குணப்படுத்தும்.

**பிஞ்சு** - குன்மத்தை போக்கும்

**பழம்** - கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களையும் குணப்படுத்தும்.

**பிசின்** - விந்துவை கெட்டிப் படுத்தி அதன் குறையை நீக்கும்.

வில்வ இலைச் சாறை எடுத்து அதில் மிளகுத்தூள் சேர்த்து ஒரு மண்டலம்காலையும், மாலையும் பத்திய முறைப்படி இறைவனை வணங்கி அருந்தி வந்தால்காமாலை மற்றும் இரத்த

சோகையால் உண்டான பாதிப்புகள் நீங்கும்.

வில்வ இலைச் சாறுடன் தேன் கலந்து தினமும் காலையில் வெறும் வயிற்றில்அருந்தி வந்தால் மூக்கில் நீர் வடிதல், சுரம், இருமல், தொண்டைக்கரகரப்பு, வாய் குளறல், மயக்கம் தீரும். தொடர்ந்து 40 நாட்கள் கற்பமுறைப்படி அருந்தி வந்தால் மேற்கண்ட பிணிகளிலிருந்து முழு விடுதலை பெறலாம்.

வில்வ பூவை உலர்த்தி பொடி செய்து நீர்விட்டு காய்ச்சி அருந்தினால் மாந்தம் நீங்கும்.

வில்வ இளம் பிஞ்சை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து எருமைத் தயிரில் கலந்துஅருந்தினால் வயிற்றுப்புண், குடல்புண், தொண்டைப் புண் ஆறும். சிறுபிள்ளைகளுக்கு கொடுத்தால் வயிற்றுக் கடுப்பு, சீதக் கழிச்சல் நீங்கும்.

வில்வ காயை பசுவின் பால் விட்டு அரைத்து தலைக்கு தேய்த்து குளித்துவந்தால் மண்டைச் சூடு, கண் எரிச்சல் நீங்கி கண்கள் குளிர்ச்சியடையும்.





**மாதூரத் தாலை மடக்களுர்போ மாந்தவரா**

**மாலூரத்தாலை மடிவபோன் - மாலூரம்**

(தேரையர் நளவெண்பா)

வில்வ இலை, இஞ்சி, சோம்பு சேர்த்து குடிநீராக்கி ஒரு மண்டலம் கற்பமுறைப்படி பத்தியம் கடைப்பிடித்து அருந்தி வந்தால் மூல நோய் குணமாகும்.

வில்வ வேர், சிற்றாமுட்டி வேர், சுக்கு இம்மூன்றையும் சேர்த்துக் காய்ச்சிஎட்டில் ஒன்றாய் ஆன பதத்தில் வடித்து தேன் கலந்து அருந்தினால் கொடியமுப்பிணியும் தீரும்.

வில்வத்தின் கனி, காய், இலை, வேர் முதலானவற்றை மணப் பாகு, ஊறுகாய்,குடிநீர், தைலம் இதில் எதாவது ஒன்று தயாரித்து ஒரு மண்டலம் உட்கொண்டால்உடலுக்கு அழகையும், ஆண்மையையும் கொடுக்கும். வாய் குழறிப் பேசும் தன்மைநீங்கும். மேலும் பல கற்ப மூலிகைகள் பற்றி வரும் இதழில் விரிவாகக்காண்போம்.

- தொடரும்




ஆன்லைன் ஷாப்பிங் நிறுவனங்களுக்கு கடும் கெடுபிடிகளை அமல்படுத்தியதை அடுத்து, மொபைல் வாலட்கள் இப்போது திணறி வருகின்றன. முன்னணியில் உள்ள வாலட் நிறுவனங்கள், பல லட்சம் வாடிக்கையாளர்களை இழக்க நேரிடும். மத்தியில் உள்ள பாஜ அரசு, நேரடி பணபரிமாற்றத்தை ஊக்குவிப்பதை தவிர்த்து, பல வகையிலும் டிஜிட்டல் பரிமாற்றங்களை ஊக்குவித்து வருகிறது.

இந்த வகையில், ஆன்லைன் ஷாப்பிங் அதிகரித்து விட்டது. ஆன்லைன் ஷாப்பிங் உட்பட பல பணபரிமாற்றங்களுக்கு பேடீம், அமேசான் உட்பட பல தனியார் டிஜிட்டல் பேமென்ட் வாலட்கள் புற்றீசல் போல வந்து விட்டன. மொபைல் ரீசார்ஜ் முதல் ஆன்லைன் ஷாப்பிங் வரை வாலட்கள் மூலம் பணம் செலுத்த இந்த தனியார் மொபைல் வாலட்களை வாடிக்கையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வாலட்களுடன் தங்கள் வங்கி கணக்கை இணைத்தோ, தனியாக அவ்வப்போது பணம் போட்டோ வாலட்களை பயன்படுத்தி வருகின்றனர்.

பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின், இது போன்ற வாலட்கள் புற்றீசல் போல பெருகி வருவதால், வாடிக்கையாளர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க அவர்களிடம் அவர்களை பற்றிய தகவல்களை பெற்று, அதற்கு முகவரி உட்பட சான்று நகல்களை பெற வேண்டும் என்று ரிசர்வ் வங்கி உத்தரவிட்டிருந்தது. ஆனால், மொபைல் வாலட் நிறுவனங்களால் தங்கள் வாடிக்கையாளர்களின் தனி நபர், முகவரி சான்றுகளை பெற முடியவில்லை. குறைந்தபட்ச அளவில் தான், அவர்கள் யார் என்பதை உறுதி செய்துகொள்ள 'ஒன் டைம் பாஸ்வேர்ட்' எண் அனுப்பி உறுதி செய்து கொண்டது.

ஆனால், இந்த சான்று போதாது, வாடிக்கையாளர்கள் பற்றி முழுமையான கேஓய்சி (உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்) முறைப்படி சான்றுகளை பெற வேண்டும் என்று கடுமையாக இந்த முறையை பின்பற்ற தவறினால், பிப்ரவரி மாதம் இறுதியில் இருந்து



# அரசு கிடுக்கிப்பிடியால் வாடிக்கையாளர்களை இழக்கும் அபாயம்!

இந்த வாலட்கள் இயங்காது; தடை விதிக்கப்படும் என்றும் எச்சரித்து உள்ளது. இதனால், பல வாலட் நிறுவனங்களும் பெரும் குழப்பத்தில் உள்ளன. அமேசான் போன்ற சில நிறுவனங்கள் மட்டும், வாடிக்கையாளர்கள் வீட்டுக்கு சென்று கேஒய்சி சான்றுகளை பெற்று பூர்த்தி செய்து வருகின்றன. மற்ற நிறுவனங்கள் அந்த பணியில் இன்னும் இறங்கவில்லை. இதனால், இந்த நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களை இழக்க நேரிடும் என்று தெரிகிறது.

'யுனிபைட் பேமன்ட் இன்டர்பேஸ்' என்று அழைக்கப்படும் யுபிஐ வாலட் மட்டும் வாடிக்கையாளரின் முழு தகவல்களை பெற்று இயங்குகிறது. அதனால், அந்த வாலட்க்கு எந்த சிக்கலும் இல்லை. பிப்ரவரி மாதத்துக்கு பின், இந்த வாலட்டில் அதிகம் பேர் இணைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யுபிஐயில் ஒரு வங்கியில் இருந்து இன்னொரு வங்கி கணக்குக்கு பணம் அனுப்புவது என்பது மிகவும் எளிது. அதனால் பல வாடிக்கையாளர்களுக்கும் இந்த வாலட் கைகொடுக்கிறது. கடந்த டிசம்பர் மாதம் மட்டும் யுபிஐ மூலம் 62 கோடி பண பரிமாற்றங்கள் நடந்துள்ளன. மற்ற தனியார் வாலட்களில் 35 கோடி பண பரிமாற்றங்கள் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின் தான் தனியார் வாலட்கள் அதிகரித்துள்ளன. அவற்றில் பரிமாற்றப்படும் பணம் எந்த வகையில் உண்மையானது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. சந்தேகப்படும் நிலையில் தான் இது போன்ற வாலட் நிறுவனங்களை வாடிக்கையாளர்களின் கேஒய்சி தகவல்களை பெற்று உறுதி செய்ய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது. விதிகளை மீறும் தனியார் வாலட்கள் பிப்ரவரி மாதத்துக்கு பின் இயங்குவதில் சிக்கல் தான்.

- சத்யராஜ்

# மீண்டெழுகிறதா கை?

காங்கிரஸ் இல்லாத இந்தியா என்று பாஜக மேற்கொண்ட பிரச்சாரத்துக்கு ஏற்ப அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்துவந்த காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் எழுச்சி தந்திருக்கிறது ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள். ராகுல் காந்தி கட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற முதலாமாண்டு நாளில் வெளியான தேர்தல் முடிவுகள், புதிய தலைமையின் வல்லமையைப் பறைசாற்றுவதோடு, 'இந்தியாவின் தவிர்க்க முடியாத அங்கம் காங்கிரஸ் என்ற பெருமையையும் மீட்டெடுத்திருக்கிறது. மிக முக்கியமான விஷயம், பாஜக தன்னுடைய கோட்டையாக மாற்றிவிட்ட இந்தி பிராந்தியங்களில் காங்கிரஸின் மூன்று வெற்றிகளும் அமைந்திருப்பது.

மத்திய பிரதேசமும், அதனிடமிருந்து பிரிந்த சத்தீஸ்கரும் 15 ஆண்டுகளாக பாஜக கையில் இருந்தன. மத்திய பிரதேசத்தில் இப்போதும்கூட பாஜக 41% வாக்குகளைப் பெற்றிருக்கிறது; காங்கிரஸ் 40.9% வாக்குகளையே பெற்றிருக்கிறது என்றாலும், பாஜகவைக் காட்டிலும் கூடுதலான தொகுதிகளை வென்றதால் அங்கு ஆட்சி



அமைக்கிறது. மேலும், 2013 தேர்தலுடன் ஒப்பிட 3.8% வாக்குகளை பாஜக அங்கே இழந்திருக்கிறது. மாறாக, காங்கிரஸ் 4.6% வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றிருக்கிறது. சத்தீஸ்கரில் பாஜகவைவிட 10% வாக்குகளை அதிகம் பெற்றிருப்பதோடு, மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான தொகுதிகளிலும் வென்றிருக்கிறது காங்கிரஸ். ராஜஸ்தானில் இந்தத் தேர்தலில் பாஜகவைக் காட்டிலும் காங்கிரஸ் வெறும் 0.5% வாக்குகளை மட்டுமே அதிகம் வாங்கியிருக்கிறது என்றாலும், 2013 தேர்தலுடன் ஒப்பிட அதன் வாக்குவீதம் 6.2% உயர்ந்திருக்கிறது; பாஜகவுக்கு 6.4% சரிந்திருக்கிறது. இந்த மூன்று மாநிலங்களிலும் மொத்தமுள்ள 65 மக்களவைத் தொகுதிகளில் 62 தொகுதிகளை 2014 தேர்தலில் பாஜக வென்றது என்பதிலிருந்து இந்தச் சரிவு அதை எவ்வளவு பாதிக்கக்கூடியது என்பதை நுட்பமாக அறியலாம்.

தேர்தல் முடிவை வெகு கவனமாக ஆராய்ந்தால் 2019 தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க காங்கிரஸுக்கு இப்போது கிடைத்துள்ள வெற்றிகள் போதுமானதாக இருக்காது. அதேசமயம், மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையை அளிக்க இந்த முடிவுகள் போதுமானவை. தெலங்கானாவிலும், மிசோரத்திலும் காங்கிரஸுக்குக் கிடைத்த தோல்வியின் கசப்பை, இந்த மூன்று மாநில வெற்றிகள் போக்கிவிடும்.

தெலங்கானாவில், தெலங்கானா ராஷ்டிர சமிதி அமோக வெற்றி பெற்றிருக்கிறது. தெலங்கானா தனி மாநிலமாக அமைவதற்கான போராட்டங்களை முன்னெடுத்தவர் என்பதோடு, புதிய மாநிலத்தை வளர்ச்சிப் பாதை நோக்கியும் செலுத்தியவர் என்ற வகையில் சந்திரசேகர ராவுக்குக் கிடைத்திருக்கும் இந்த வெற்றி எதிர்பார்த்தது, நியாயமானது. 2004, 2009 தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு அதிக

தொகுதிகளைத் தந்த மாநிலம் ஒன்றுபட்ட ஆந்திரம். அந்தக் கணக்கை மனதில் வைத்து தெலுங்கு தேசத்துடன் இங்கு கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது காங்கிரஸ். ஆனால், ஆந்திரத்தை இரண்டாகப் பிரிக்கத் தடையாக இருந்தவர் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு என்ற பழைய வரலாற்றைத் தோண்டியெடுத்து, அதையே காங்கிரஸ் கூட்டணிக்கு எதிரான பெரும் ஆயுதமாக மாற்றினார் சந்திரசேகர ராவ். விளைவாக, தனித்து நின்றால் வெல்லும் சாத்தியமிருந்த தொகுதிகளையும் இங்கே இழந்திருக்கிறது காங்கிரஸ்.

சிறிய மாநிலமான மிசோரத்தில் ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசை இழந்திருப்பது, ஒட்டுமொத்த சூழலில் அதற்குப் பெரிய இழப்பு இல்லை என்றாலும், மோசமான ஆட்சி நிர்வாகத்துக்கு அது கொடுத்திருக்கும் விலை இது. 2014 பேரிடிக்குப் பின் கட்சியை வெற்றி நோக்கி அழைத்துச் செல்வதில் பெரும் உழைப்பைக் கொடுத்துவரும் ராகுல் காந்தி, கட்சி ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் நிர்வாகம் சிறப்பாக நடப்பதையும் உறுதி செய்ய வேண்டும். சமீப காலத்தில் ஆட்சியிலிருந்த எந்த மாநிலத்திலும் காங்கிரஸ் முதல்வர் மீண்டும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளவில்லை என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

மத்திய பிரதேசத்திலும் ராஜஸ்தானிலும் காங்கிரஸுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்திருக்கிறார் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதி. சமாஜ்வாடி கட்சியும் அதை வழிமொழிந்திருப்பது மக்களவைத் தேர்தலில் காங்கிரஸுடன் இந்த இரு கட்சிகளும் சேர்ந்து பயணிப்பதற்கான அச்சாரமாக அமையலாம். அப்படி அமைந்தால், இந்தி மாநிலங்களில் பாஜகவுக்குப் பெரும் சவாலாக அது அமையும்.

ஒட்டுமொத்த தேர்தல் முடிவுகளையும் கவனமாகப் பரிசீலித்தால், பாஜக படிப்படியான சரிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை உணரலாம். இதற்கு முன்னதாக நடந்த மக்களவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களிலேயே இதற்கான சமிக்ஞைகள் வெளிப்பட்டன. இந்த முடிவுகள் மேலும் அதை உறுதிப்படுத்துகின்றன. வெறும் மாநில அரசுகளின் ஆட்சி மீதான அதிருப்தியை மட்டுமே இத்தோல்விகள் வெளிப்படுத்தவில்லை. சொல்லப்போனால், மத்தியில் பாஜக அரசு எடுத்துவரும் தவறான முடிவுகளுக்கான விலையையும் சேர்த்தே மாநிலத் தலைவர்கள் தந்திருக்கிறார்கள்.

நாட்டு மக்களின் பொருளாதாரம் ஆரோக்கியமாக இல்லை. பணமதிப்புநீக்கமும், ஜிஎஸ்டியின் தவறான அமலாக்கமும் ஏற்படுத்தியிருக்கும் தேக்கங்கள் வேலைவாய்ப்புகளைக்



காணாமலாக்கிவருகின்றன. கிராமப்புற மக்கள் கடும் கொந்தளிப்பில் இருக்கிறார்கள். குறிப்பாக விவசாயிகள் பெரும் அதிருப்தியில் இருக்கிறார்கள். பொருளாதாரத்தை முடுக்கிவிடுவதற்கான எந்தச் செயல்திட்டமும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், மக்கள் நலப் பிரச்சினைகளில் கவனம் காட்டுவதை விட்டுவிட்டு, சமூக ஒற்றுமையையும் அமைதியையும் குலைக்கும் செயல்களில் ஈடுபடும் சங்கப் பரிவாரங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது அரசு. பெரும் மாற்றத்தை எதிர்பார்த்து வாக்களித்த மக்கள் ஏமாற்றத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பாஜகவுக்கு இது பெரிய எச்சரிக்கை சமிக்ஞைதான். காங்கிரஸ் வழியாக அதை மக்கள் கொடுத்திருக்கிறார்கள்.

- தரணி

நோய் நிவாரணியாகவும், வலி நிவாரணியாகவும் அறிமுகப்படுத்தப்பட்ட போதைப் பொருள், இன்று உலகில் பெரும் நோயாகப் பரிணமித்து மனிதனை அழித்துக்கொண்டிருக்கின்றது. போர்க்காலத்தில் தற்காலிக நிவாரணியாக வந்து நிரந்தரமாகத் தங்கிவிட்ட அந்தப் போதைப்பொருளை ஒழித்துக்கட்டுவதற்கு ஒரு போர் செய்யும் நிலையே ஏற்பட்டிருக்கிறது.

படிப்பு, விளையாட்டுகளில் ஆர்வம் குறைகிறது. சோம்பல் மற்றும் மந்தமான நிலை காணப்படுகிறது. தொடர்ந்து போதைப் பொருட்கள் பயன்படுத்துவோருக்கு நரம்பு மண்டலம், மனநிலை பாதிக்கப்படுகிறது. மாரடைப்பு, பக்கவாதம், வாய், உணவுக் குழாய், வயிறு, நுரையீரல் உள்ளிட்டவற்றில் புற்று நோய் பாதிப்பும் ஏற்படுவதுடன் கல்லீரல், கணையம் போன்ற உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றன.

# போதையை ஒழிக்கும் போர்!



இன்று உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுமார் 200 மில்லியன் பேர் போதைப் பொருட்கள் உபயோகிப்பவர்களாக உள்ளனர். அறியாமை, விரக்தி, உளவியல் பிரச்சினைகள், பொழுதுபோக்கு, தற்காலிக உற்சாகம் போன்ற அம்சங்கள் போதைப் பொருள் பயன்பாட்டுக்கான காரணங்களாக அமைகின்றன. இதுவே பின்னர், போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்ற தன்மையை ஏற்படுத்தி விடுகிறது. போதைப்பொருள் பாவனையையும் கடத்தலையும் கட்டுப்படுத்தும் முயற்சியில், உலகிற்கு ஓர் முன்மாதிரியான நாடாக பிலிப்பைன்ஸ் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்நாட்டு ஜனாதிபதி றொட்றிகோ டுட்டர்டே, போதைப் பொருள் கடத்தலை இரும்புக் கரங்கொண்டு அடக்கி வருகிறார். தனது இலக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் அவர் கண்டிருக்கிறார்.

போதைப் பொருட்கள் பயன்படுத்துவோரிடம் தன்னம்பிக்கை குறைகிறது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பயன்படுத்தப்படும் போதைப்பொருள் பாவனை காரணமாக அவர்களின் நரம்புக் கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்படுவதாக தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது. சில மாணவர்கள் மன நோய்க்கான வில்லைகளைப் பயன்டுத்துவதாகவும் அந்தச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. போதைப்பொருள் ஒழிப்பு செயற்பாடுகளில் நாம் மட்டுமன்றி உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன. அனைத்து நாடுகளிலும் சட்டவிரோத போதைப்பொருள், சட்டபூர்வ போதைப்பொருள் என இரு வகைகள் இருக்கின்றன.

அரசாங்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு விற்கப்படுபவை சட்டபூர்வமானவை. அரசாங்கம் அனுமதிக்காத கசிப்பு, கஞ்சா, ஹஸீஸ், மர்ஜூவானா போன்றவை சட்டவிரோதமானவை. புகையிலை சேர்க்கும் வெற்றிலை கூறும் அவற்றில் அடங்கும். இவை முழு மனித குலத்துக்கும் பெரும் சவாலாக உள்ளன. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் ஆட்சிகளைக் கவிழ்க்கின்றனர். பல நாட்களில் தமக்கு தேவையற்ற அரசியல்வாதிகளை விரட்டுகிறார்கள். தேவையானோரை நியமிக்கிறார்கள். எமது நாட்டில் அந்த நிலை இன்னும் ஏற்படவில்லை.

பதினெட்டாம்நூற்றாண்டின்தொடக்கத்தில் சீனாவைச் சேர்ந்தவர்கள் கலிஃபோர்னியாவில் ஓபியம் என்ற போதைப் பொருளை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நாளடைவில் அது மக்களிடையே மிக வேகமாக பரவி விடுகிறது. கலிஃபோர்னியாவைத் தொடர்ந்து நியூயார்க்குக்கும் இது பரவியது. தொடர்ந்து ஓபியத்தை பயன்படுத்தி அவர்களுக்கு சலித்து விட்டது. வேறு ஏதேனும் கிடைக்காதா என்று ஏங்கித் தவித்த போது மார்பைன், கோகைன் ஆகியவை அறிமுகப்படுத்தப்படுகின்றன.

பொதுவாக இந்த மார்ஃபைன் சிவில் யுத்தம் நடைபெற்ற போது போர் வீரர்களுக்குக் காயத்தின் வலி





தெரியாமலிருக்க கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதுவே போதைப்பழக்கத்திற்கு அடிமையாக வைத்திடவே அதைக் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். வீரர்களுக்கு அது கண்டிப்பாக தேவை எனும் சூழல் நிலவியதால் அதிகாரிகளுக்குத் தெரியாமல் வீரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

*1914* ஆம் ஆண்டு ஹரிசன் சட்டம் கொண்டுவரப்படுகிறது. அதன்படி மருத்துவ காரணங்கள் அல்லாமல் இவற்றை யாரும் பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் கொண்டு வருகிறார்கள். சந்தையில் கிடைப்பது அரிதானது, உடன் கருப்புச் சந்தையில் அரசாங்கத்திற்கு தெரியாமல் சட்டத்திற்குப் புறம்பாக விற்க ஆரம்பித்தனர்.

வியட்நாம் போர் நடந்தபோது அதில் பங்கு பெற்ற வீரர்களின் பதினைந்து சதவீதம் பேர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்று கூறப்படுகிறது. இது மிகத் தீவிரமான முறையில் அடிமையானவர்கள். எண்பது சதவீதத்திற்கும் மேற்பட்டோர் போதைப் பொருளை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

*1970* களுக்கு பிறகு உலகம் முழுவதிலுமே இந்தப் போதைப் பொருள் மிகப்பெரிய பணம் கொட்டும் தொழிலாக பரவ ஆரம்பித்தது. இந்தக் காலத்தில் தான் போதைப் பொருள் மிகப்பெரிய வலையமைப்பாகவும் வளர ஆரம்பித்தது. போதைப் பொருளை நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருளில் பல வடிவங்களில் கொண்டு வந்து விட்டதாலும், பெரும்பாலும் யாருக்கும் தெரியாமலே நடப்பதாலும், கோடிக்கணக்கான பணம் கைமாறுவதாலும் இதனைக் கண்டுபிடிப்பது மற்றும் தடுப்பது மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. அன்றைய காலகட்டத்தைவிடவும் இன்று போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு உலகெங்கும் பரவி விரவி கிடக்கின்றது.

போதைப் பொருளைக் கட்டுப்படுத்து முகமாக, குற்றவாளிகளுக்கு மரணதண்டனையை நிறைவேற்றத் தயாராக இருப்பதாக இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எனினும், மனித உரிமை ஆர்வலர்களின் எதிர்ப்பின் விளைவால் அந்த முயற்சி கிடப்பில் இருக்கின்றது. எவ்வாறெனினும், மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குக் குரல் கொடுப்பதற்காகவேனும் போதைப் பொருளால் அழிவடையாத ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது கட்டாயமாகும்!

- K. ரமேஷ் குமார்

# போலி ஆதார் அட்டை தயாரிப்பு!

நாடு முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் தங்களின் பயோமெட்ரிக் பதிவுகளை வழங்கி ஆதார் எண் பெற்றுள்ளனர். இந்த தகவல்கள் பாதுகாப்பானதாக இல்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. இந்த நிலையில், பிரபல பொதுத்துறை வங்கி ஒன்று பகீர் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளது. பொதுமக்கள் வங்கிகளிலும் பயோமெட்ரிக் தகவல்களை தந்து ஆதார் அட்டை பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக வங்கிகள், தனியார் ஏஜென்சிகளுடன் கூட்டு சேர்ந்து, ஆதார் பதிவு மைய ஆபரேட்டர்களை நியமித்துள்ளன. இதுபோல, அரியானா மாநிலம் ஜிந்த் மாவட்டத்தின் உசானா கிராமத்தில் விக்ரம் (வயது 40) என்பவர் மாதம் ரூ.10,000 சம்பளத்தில் ஆபரேட்டராக பணியாற்றினார்.

இவரது ஆபரேட்டர் ஐடி மூலமாக கடந்த நவம்பரில் போலி ஆவணங்களை பயன்படுத்தி ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக ஆதாரை நிர்வகிக்கும் உதய் (UIDAI) நிறுவனம் ரூ.33 லட்சம் அபராதம் விதித்துள்ளது. விக்ரமின் ஐடியை பயன்படுத்தி, லேப்டாப், கம்ப்யூட்டர், மொபைல் என 143 கருவிகளில் போலி ஆதார் அட்டை வழங்கப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு. சம்மந்தப்பட்ட தனியார் ஏஜென்சியை சேர்ந்த 250 ஆபரேட்டர்கள் மீது இதுபோன்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டு அவர்களுக்கு உதய் அபராதம் விதித்துள்ளது.

இதைப் பற்றி விசாரித்த பிரபல வங்கி, ஆபரேட்டர் விக்ரமுக்கு வழங்கப்பட்டுள்ள லாகின் ஐடி ஒரே ஒரு கம்ப்யூட்டரில், அதாவது அவர் பணியாற்றும் இடத்தில் மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக வழங்கப்பட்டிருக்கிறது. இதுவே, பல்வேறு இடங்களில், பல கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தும்படியான மல்டிபிள் லாகின் ஐடியை உதய் மற்றும் வங்கிகள் வழங்க முடியும். ஆனால், விக்ரமுக்கு மல்டிபிள் ஐடி தரப்படவில்லை என வங்கி நிர்வாகம் உறுதிபடுத்தி உள்ளது.

எனவே, உதய் பாதுகாப்பு சிஸ்டத்தை யாரோ ஹேக் செய்து, விக்ரம் பெயரில் மல்டிபிள் ஐடியை உருவாக்கி மோசடி




செய்திருப்பதாக வங்கி குற்றம்சாட்டி உள்ளது. இவ்வாறான போலி ஆதார் அட்டை மூலமாக வருமான வரித்துறை, அரசு அலுவலகங்களில் முறையற்ற பண பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. அதோடு விக்ரமின் வங்கி கணக்கில் இருந்தும் கூட பணம் திருடப்பட்டுள்ளது. எனவே, விக்ரம் மீண்டும் பணியாற்ற அனுமதி வழங்குமாறு வங்கி நிர்வாகம் உதய் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. அப்படியென்றால் விக்ரமைப் போல எத்தனை ஆபரேட்டர்களின் ஐடிக்கள் மூலமாக போலி ஆதார் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பெரும் கேள்விக்குறியாகி உள்ளது.

விக்ரம் விவகாரம் குறித்து உதய் நிறுவனம் அளித்த பதிலில், ‘‘ஆதார் தகவல்கள் அனைத்தும் முழு பாதுகாப்புடன் உள்ளன. இதில் பயோமெட்ரிக் உள்ளிட்ட எந்த வகையிலும் பாதுகாப்பு விதிமீறல்கள் நடக்கவில்லை. வங்கி நிர்வாகத்தின் குற்றச்சாட்டு குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது’’ என கூறி உள்ளது.

-S. சுப்ரமணியன்

கோதாவரியில் இருந்து காவிரி இணைப்பு திட்டம் கொண்டு வரப்போகிறோம். இதன் மூலம் 4 மாநிலங்கள் பயன் அடையும் என்று கூறியுள்ளார் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி. இதற்கு, ரூ.60 ஆயிரம் கோடி செலவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி யின் கடனுதவியுடன் செய்வதாக கூறினால், இந்த தண்ணீரை விற்பனை செய்ய மாட்டோம், மக்களை காசு கொடுத்து வாங்க வைக்க மாட்டோம் என்று மத்திய அரசு உறுதிக்கொடுக்குமா என்பது தான் இப்போது கேள்வி. தண்ணீருக்கு காசு வைக்கிற உத்தி இதில், ஒளிந்துள்ளது.

கர்நாடகா காசு கொடுத்து தண்ணீரை இருக்கும். அதன்பிறகு இந்த திட்டம் குறித்து பேச மாட்டார்கள். கர்நாடகா அரசு 45 டிஎம்சி தண்ணீர் தர மறுக்கிறது. அப்படியிருக்கும் போது ஆந்திர அரசு எப்படி தண்ணீர் தரும். தண்ணீர் கொடுப்பதற்கு என்ன காரணம் உள்ளது. மக்கள் மொழியில் ஒன்று சொல்ல வேண்டுமென்றால் அரசனை நம்பி புருஷனை கைவிடுங்கள் என்று மத்திய அரசு தமிழகத்திடம் சொல்கிறது.

நாட்டில் உள்ள நதிகள் இணைப்பு திட்டத்திற்கு ரூ.5 லட்சத்து 60 ஆயிரம் கோடி செலவாகும் என்று முதலில் கூறினார் கள். இப்போது, ரூ.11 லட்சம் கோடி

# காசு கொடுத்து மக்களை தண்ணீர் வாங்க வைக்கும் திட்டம்

வாங்காது. கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர் ஆந்திராவிற்கு இருக்கிறது. அவர்கள் காசு கொடுத்து வாங்க மாட்டார்கள். கேரளாவும் காசு கொடுத்து வாங்காது. காரணம், அவர்களின் தண்ணீர் தேவை போகவே ஆண்டுக்கு 2 ஆயிரம் டிஎம்சி நீர் கடலில் கலக்கிறது. தமிழ்நாட்டிற்காகத்தான் இணைக்கப்போவது போன்று சொல்லி, தமிழகத்தின் குடிநீருக் காகவும், விவசாயத்திற்காகவும், மற்றும் இதர தேவைகளுக்கு இந்த தண்ணீரை பயன்படுத் தினால் மீட்டர் பொருத்தி காசு வாங்குவார்கள்.

இது, உண்மையில் சொன்னால் தண்ணீர் விற்பனை திட்டம் தான். உச்சநீதிமன்றம் தீர்ப்பு கொடுத்தாலும் கூட காவிரி தண்ணீர் ஒப்பந்தப்படி தர இவர்கள் தயாராக இல்லை. மேகதாது அணையை கட்ட கர்நாடக அரசு முயற்சிக்கிறது. அந்த அணையை கட்டுவதற்கு மத்திய அரசு ஆதரவாக உள்ளது. தமிழகத்தில் எழும் எதிர்ப்பை குறைப்பதற்காக இப்படியொரு திட்டம் கொண்டு வரப்போவதாக கூறி வருகின்றனர் என்ற புகாரும் எழுந்துள்ளது. தமிழக அரசும், தமிழக மக்களும் ஏமாந்து விடக்கூடாது. கோதாவரி-காவிரி இணைப்பு திட்டம் வராது. மேகதாதுவில் அணை கட்டும் வரை இந்த திட்டம் குறித்து பேச்சு அடிபட்டு கொண்டே செலவாகும் என்கின்றனர். 15 ஆண்டுகளில் நிறைவேறும் போது, அதாவது இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வந்தால் ரூ.50 லட்சம் கோடி செலவு அதிகரித்து விடும். இது இந்தியாவில் நதிகள் இணைப்பு திட்டம். அது போன்று தான் கோதாவரி-காவிரி இணைப்பு திட்டம் இன்னும் சில ஆண்டுகளால் ரூ.60 ஆயிரம் கோடி என்பது ரூ.5 லட்சம் கோடி என்று ஆகும். இதை நடைமுறைப்படுத்தும் போது, அதானி, அம்பானி என பன்னாட்டு முதலாளிகள் இதில் ஊடுருவி முதலீடு செய்வார்கள்.

நெடுஞ்சாலைகள் கூட தனியார் முதலீடுகள் இல்லாமல் இல்லை. அதே போன்று இந்த நதிகள் இணைப்பு பராமரிப்பு பணி என்று கூறி கொண்டு தனியாரிடம் ஒப்படைப்பது என்று முன்னரே முடிவு செய்தாகி விட்டது. ஆறுகள் பராமரிப்பு, தண்ணீர் பகிர்வு என்று வரும் போது, பெருமுதலாளிகள் இருப்பார்கள். அவர்கள் காசுக்கு தான் தண்ணீரை விற்பார்கள். இதற்குள் மிகப்பெரிய முதலீடுகள் இருக்கிறது. அப்படி வந்தால், இந்த திட்டப்படி காசு கொடுத்து வாங்கும் நிலை ஏற்படும் என்பதை எச்சரிக்கிறோம்.

- நிவேதிதா

முனைவர் சைலேந்திர பாபு ஓர் இந்தியக் காவல் பணி அதிகாரி ஆவார். இவர் 1987 ல் தமிழ்நாடு பணிநிலைப் பிரிவின் இந்தியக் காவல் பணி அதிகாரி ஆகப் பணியைத் தொடந்தார். அவர் 2012 வரை தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழுவின் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநராகப் ( A D G P ) பணியாற்றினார் .



எனும் தமிழ் நூலை எழுதி உடலை கட்டுக்கோப்பாக வைத்திருப்போருக்கு விருந்தாக இந்த நூலைத் தந்துள்ளார். வீர தீர விளையாட்டுச் செயல்கலான நீச்சல், தடகளம், துப்பாகிச்சுடுதல், சைக்கிளிங் போன்றவற்றில் அதி தீவிர பங்களிப்பால் நீச்சலுக்காகத் தேசிய போலீஸ் அகாடமி மூலம் “RD சிங்”

# இதுதான்டா போலீஸ்

**சிறப்புப் பார்வை**

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பு முடித்து, மதுரையில் அமைந்துள்ள விவசாயப் பல்கலைக்கழகத்தில், விவசாயத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருந்தாலும், பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொதுச்சட்டம் இளங்கலை பட்டமும் மக்கள் தொகை கல்வியில் முதுகலைப் பட்டமும் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் அவருடைய “Missing Children” ஆய்வறிக்கைக்காக முனைவர் பட்டம் பெற்றார். 2013 ஆம் ஆண்டில் மனித வள வணிக நிர்வாக படிப்பில் முதுநிலைப் பட்டம் பெற்றார்.

உடற்பயிற்சியைத் தீவிரமாகக் கடைபிடித்து உடலைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல் ‘உடல்நலத் தகுதி’ கோப்பையை பெற்றுள்ளார். பள்ளி முதல் கல்லூரி வரை மாணவ மாணவியர்களுக்கு இடையே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் காவல்துறை அதிகாரியான காவல்துறை கூடுதல் இயக்குநர் முனைவர். திரு.C.சைலேந்திரபாபு IPS அவர்கள், தனது மற்றும் ஓர் சாதனை முயற்சியாக தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரையிலான 32 கி.மீ தொலைவு பயணத்தை தொடங்கி சாதனை புரிந்தார்.

திசம்பர் 2004 இல் பாங்காக்கில் நடைபெற்ற Asian Masters Athletic Championshipsலும், சென்னை மராத்தான், மற்றும் கோவை மராத்தான் போட்டியிலும் தொடர்ந்துள்ளது.

பிப்ரவரி 2008 ஆம் ஆண்டில் இந்தியன் கடற்கரையோரப் பாதுகாப்பு படை மற்றும் கடலோரப் பாதுகாப்பு உறுப்பினர்களுடன் இணைந்து கன்னியாகுமரியிலிருந்து

சென்னைக்கு 890 கி. மீ சைக்கிள் பேரணியை ஏற்பாடு செய்து பேரணியிலும் கலந்துக் கொண்டார். 10 நாட்களாக நடந்த அந்த பேரணியில் கடலோரக் காவலர்களின் செயல்பாடு மற்றும் கடலோர மக்களின் மத்தியில் காவற்படையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயலாற்றினார். துப்பாக்கி சுடுவதில் ஆர்வம் கொண்ட சைலேந்திர பாபு அவர்கள் காவல்துறை மற்றும் பொதுத்துறை சார்ந்த துப்பாக்கிச்சுடும் போட்டிகளிலும் கலந்து கொண்டார்.

இந்தியக் காவல் பணி அதிகாரி ஆக (IPS) பணியில் சேர்ந்த சைலேந்திர பாபு அவர்கள் ஐதராபாத் தேசிய காவல் அகாடமி மூலம் பயிற்சிப் பெற்றார். காவல்துறை உதவி கண்காணிப்பாளராக (ADSP) கோபிச்செட்டிபாளையம், சேலம் மற்றும் திண்டுக்கல்லில் பணியாற்றி, காவல்துறை கண்காணிப்பாளராக செங்கல்பட்டு, சிவகங்கை, கூடலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலும் பணியாற்றினார், பின்னர் காவல்துறை துணை ஆணையாளர் ஆக அடையாரிலும் பின் காவல்துறை துணைத் தலைவர் (DIG) ஆக விழுப்புரம் சரகத்திலும் இணை ஆணையாளராக சென்னையிலும் பணியாற்றினார்.

கரூர் தலைமை லஞ்ச ஒழிப்பு அதிகாரியாகப் பணியாற்றுவதற்கு முன்பு



**இளைஞர்கள், சமுதாயமும் குடும்பமும் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை அறிந்துக்கொள்ள வேண்டும். நாம் என்ன செய்கிறோம், எதற்காக செய்கிறோம் என்பதை அறிந்து செயல்பட வேண்டும். தன் பண்புகளை இளைஞர்கள் ஆராய்ந்து, அவற்றை சரி செய்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் ஏதாவது ஒரு துறையில் சிறந்து விளங்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்புக் கிடைக்கும். கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளாதவர்கள் மன்னிக்கப்படக் கூடாதவர்கள்.**

காவல்துறை துணைத் தலைவர் ஆக திருச்சியிலும் பின் சென்னை வடக்கு மண்டலத்தின் காவல்துறை துணைத் தலைவர் ஆக பணியாற்றுவதற்கு முன் முன்பு காவல்துறை தலைவராக (IG) கோவையிலும் பணியாற்றினார்.

ஏப்ரல் 2014 ல் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குனராக (Assistant Director of General Police) பதவி உயர்வுப் பெற்ற சையிலேந்திர பாபு தற்போது தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு படைக்குழுவின் தலைமை இயக்குனராக பணியில் உள்ளார்.

**அவர் எழுதிய நூல்களில் சில**

- நீங்களும் இந்தியக் காவலர் பணியாளர் ஆகலாம்.(2008)
- Boys & Girls - Be Ambitious (2009)
- Principles of success in interview (2009)
- உடலினை உறுதி செய்
- அமெரிக்காவில் 24 நாட்கள்
- நீங்களும் ஐ பி எஸ் அதிகாரி ஆகலாம் சாதிக்க ஆசைப்படு

\- ஆசிரியர்

# உண்மையான அன்பைப் பிறருக்குக் கொடு

**ஒரு பக்க சிறுகதை**

ஒரு நாள் ராஜா, இரவில் மாறுவேடத்தில் நகர்வலம் வந்தார். இரண்டு மெய்க்காப்பாளர்களும் அவரோடு கூடவே சென்றனர். திடீரென்று கடுமையான மழையும், காற்றும் அடித்தன. வானம் இருண்டு போனது. தடுமாற்றத்தில் ராஜா காவலாளிகளை விட்டு வழி தவறிப் போய்விட்டார்.

எங்கும் காரிருள். மழையும், காற்றும் வேறு பயமுறுத்தின. சற்று தொலைவில் ஒரு சிறு குடிசை தெரிந்தது. அதிலிருந்து லேசான வெளிச்சமும் வந்து கொண்டிருந்தது. ராஜா வேகமாக அதனை நோக்கி நடந்தார். சிறிது நேர நடையிலேயே குடிசையை அடைந்து, விரைவாய் உள்ளே நுழைந்தார். அதற்குள்ளே கந்தல் ஆடை அணிந்த ஒரு மனிதனைத் தவிர வேறு யாருமில்லை. ராஜா உள்ளே நுழைந்தும் அவன் எந்த சலனமும் இல்லாமல் அமர்ந்திருந்தான்.

மாறு வேடத்தில் இருந்த போதிலும், அவன் எழுந்து மரியாதை தராமல் அமர்ந்திருந்ததில் ராஜாவுக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. "ஏம்ப்பா! உன் வீட்டுக்கு வந்திருக்கேன், நீ மரியாதையே இல்லாம, ஒரு வணக்கம் கூட சொல்லாம உக்காந்திருக்கியே?" என்றார்.

பதிலுக்கு அவன், "நீதான் என் வீட்டுக்குள்ள அடைக்கலமா நுழைஞ் சிருக்க. உனக்கு எதுக்கு நான் வணக்கம் சொல்லணும்?" என்றான். ராஜாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் எப்போதும் நகர்வலம் போகையில் யாருக்காவது உதவி தேவைப்பட்டால் உதவி செய்வதற்காக ஒரு பொற்காசு மூட்டையை இடையில் வைத்திருப்பார். அதை அவனிடம் பிரித்துக் காட்டி விட்டு மீண்டும் கேட்டார். "பார்த்தாயா? நான் எவ்வளவு பெரியவன் என்பதை? இப்ப எனக்கு வணக்கம் சொல்வாயா?" என்றார்.

அவனும் பதிலுக்கு, "ஒரு ஏழை பக்கத்தில இருந்தும் ஒரு மூட்டை பொற்காசை நீயே வச்சிருக்கியே, உனக்கு எப்பபடி வணக்கம் சொல்வது?" என்றான். ராஜா கோபமாய் ஒரு காசை அதிலிருந்து எடுத்து அவனிடம் வீசி, "இப்ப வணக்கம் சொல்வாயா?" என்றார். காசைத் தொடாமல் அவன் சொன்னான், "ஒரு மூட்டை காசை வச்சுக்கிட்டு அற்பமா ஒத்தக் காசை வீசுறியே, உனக்கா வணக்கம் சொல்வேன்?"

அரசர் இன்னும் உக்கிரமானார். பாதி மூட்டையை அவனருகே பிரித்துக் கொட்டி விட்டுக் கேட்டார், "எங்கிட்ட இருந்ததுல சரி பாதியைக் கொடுத்துட்டேன். இப்பவாவது வணக்கம் சொல்வியா?" மெல்லிய புன்னகையுடன் அவன் சொன்னான், "உங்கிட்ட இருக்குற அளவுக்கு இப்ப எங்கிட்டேயும் இருக்கே! இப்ப நீயும் நானும் சமமாயிட்டோமே. சரி சமமா இருக்கிற உன்னை எதுக்கு நான் மதிக்கணும்?"

ராஜாவுக்கு ஆத்திரம் கண்ணை மறைத்தது. மிச்சமிருந்த மூட்டையும் அவனிடத்தில் வீசி விட்டார், "இருந்த எல்லாத்தையுமே கொடுத்துட்டேன். இப்பவாவது வணக்கம் சொல்" என்றார். அவன் சிரித்துக் கொண்டே சொன்னான். "இப்ப உங்கிட்ட ஒன்னுமே இல்லை. ஆனா எங்கிட்ட ஒரு மூட்டை தங்கம் இருக்கு. இப்ப நீதான் எனக்கு வணக்கம் சொல்லணும்?" என்றான்.

ராஜா வாயடைத்துப் போனார். எத்தனைதான் அள்ளிக் கொடுத்தாலும் மனித இதயம் திருப்திப் படுவதில்லை. நிரந்தரமான மரியாதை என்பது பணத்தைக் கொண்டு வாங்கும் பொருளுமில்லை. உண்மையான அன்பைப் பிறருக்குக் கொடு. அதுவே பலமடங்காக உனக்குத் திரும்பக் கிடைக்கும்.

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.

உண்மை துணிவு நேர்மை

# அரசியல் தீர்ப்பு

சமூகம், அரசியல் மற்றும் புலனாய்வு இதழ்



MAKKAL VISARANAI, Tamil Monthly. Regd. No. TN/CC(S)DN/461/19-21
Registered with Registrar of Newspaper for India Under No. TNTAM44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்












- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements and anything




No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, Ph : 044 - 4861 5321**